பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

ஜவுளி வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி !
பூகொட
தயாரிப்புக்களின் பிடவைத்தினுசுகளுக்கு வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
ராஜ்கோபால்ஸ்
பூகொட மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
47, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ2/50

மங்கள வைபவமா ? நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
ராஜ்கோபால்ஸ்
(பட்டுச் சேலைகளின் காட்சியகம்)
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 விபவ ஞூ பங்குனி மீ 30 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 05 (12 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-107

# இந்தியா இன்னும் மௌனம் யுத்த நிறுத்தம் குறித்து!

## இலங்கையின் ஒருதலைப்பட்ச அறிவிப்புக்கு இதுவரை கருத்து ஏதும் இல்லை

கொழும்பு, ஏப்ரல் 12

இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக அறிவித்த ஒருவாரகால யுத்தநிறுத்தம் இன்று காலை 6 மணிக்கு அமுலுக்கு வருகின்ற போதிலும், இந்த அறிவிப்புக் குறித்து இந்தியா இன்னும் மௌனம் சாதித்து வருகிறது.

வடக்கு, கிழக்கில் இந்த யுத்தநிறுத்தத்தை அமுல் செய்ய இந்தியா இணங்கியிருப்பதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன நேற்று முன்தினம் மாலை அறிவித்திருந்தாராயினும்-

இந்த அறிவிப்புக்கு பதில் கூறும் விதத்தில் கருத்து எதனையும் இந்தியா இச்செய்தி எழுதப்படும் வரை வெளியிடவில்லை.

இதனால் இந்திய அமைதிப் படையினர் வடக்கு, கிழக்கில் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிப்பார்களா என்பது குறித்து தொடர்ந்து சந்தேக நிலை நேற்று இரவும் நிலவியது.

இந்த விடயம் தொடர்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொண்ட போதும்- தமக்கு இதுகுறித்து புதுடில்லியிலிருந்து முடிவான அறிவிப்பு ஏதும் கிடைக்கவில்லை என அங்கு கூறப்பட்டதாக கொழும்பில் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

### பிந்திய செய்தி

புதுடில்லி, ஏப். 12

இலங்கை அரசின் யுத்த நிறுத்த அறிவிப்புக் குறித்து இந்திய அரசு இலங்கையுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக நேற்றிரவு புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது. (உ)

யுத்த நிறுத்தம் குறித்து யாழ் நகரக் கொமாண்டர் அலுவலகத்துக்கு தலைமையகத்திலிருந்து அறிவுறுத்தல் ஏதும் நேற்று இரவுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### சுபநேரம்

பங்குனி - 30 புதன்கிழமை
சுபநேரம்:
04 - 36 முதல் 06 - 06 வரை
ராகுகாலம்:
12- 06 முதல் 01 - 36 வரை

## இந்தியாவில் பயிற்சியின்போது

## இலங்கை ராணுவ அதிகாரி ஏவுகணை வெடித்து மரணம்!

இந்தூர், ஏப்ரல் 12

இந்திய, மத்தியப் பிரதேசத்தில் இந்தூர் இராணுவப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் ஏவுகணை வெடித்துச் சிதறியதில் உயிரிழந்தார்.

இது பற்றிய விவரம் வருமாறு;

இந்தியாவில் மத்திய பிரதேச மாநிலத்தில் இந்தூர் நகர் அருகே உள்ள மஹவ் என்ற இடத்தில் இராணுவப் பயிற்சி நிலையம் உள்ளது.

அங்கு இலங்கை இராணுவ அதிகாரிகள் பலர் பயிற்சி பெற்றுவருகின்றனர். அவர்களுக்கு ஏவும் ஏவுகணை பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஹேமா ஏவுகணை ஏவும் தளத்தில் இலங்கை அதிகாரிகள்

(8 ஆம் பகக்ம் பார்க்)

## ஜி.சி.ஈ. (உயர்) பரீட்சையை ஒத்திவைக்கக் கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 12

எதிர்வரும் ஜூலை மாதம் நடத்தப்படவுள்ள ஜி. சி. ஈ. உயர்தரப்பரீட்சையை அக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கும்படி தென் இலங்கை ஆசிரியர்களும் மாணவ, மாணவிகளும் பரீட்சை திணைக்களத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் நீண்டகாலம் பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததால் பாடத்திட்டங்களைப் பூர்த்திசெய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலேயே பரீட்சையை ஒத்திவைக்கும்படி அவர்கள் கோரியிருக்கின்றனர். (உ-எ)

## திருமலை பஸ் நேற்று கொள்ளையிடப்பட்டது

நேற்று திருகோணமலையிலிருந்து யாழ்நகர் நோக்கி வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று கொள்ளையிடப்பட்டதாக அறியவருகிறது.

ஹொரவப்பொத்தானைக்கும் வவுனியாவுக்குமிடையில் 6ஆம் கட்டை என்னுமிடத்திலேயே கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து வவுனியாப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-9)

## மு. க. பதவி விலகும் வரை போராட்டம் தொடரும்

### ஜெயலலிதா மீண்டும் அறிவிப்பு

சென்னை, ஏப்ரல் 12

சட்டசபையில் என் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கான தார்மீகப் பொறுப்பை ஏற்று முதலமைச்சர் பதவியில் இருந்து திரு. கருணாநிதி விலகும்வரை அ. தி. மு. க. மற்றும் இந்திரா காங்கிரஸ் ஆகியன மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நடத்தும்.

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா செய்தியாளர் மத்தியில் பேசுகையில் முன்கண்டவாறு சொன்னார்.

செல்வி ஜெயலலிதா மேலும் சொன்னதாவது;

தொலைபேசி ஒட்டுக்கேட்பது சம்பந்தமான பிரச்சினை எழுப்பப்பட்ட உடனேயே கர்நாடக முதலமைச்சர் பதவியைத் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே ராஜினாமாச் செய்தார்.

இதுபோல முதலமைச்சர் திரு.கருணாநிதியும் சட்டசபை வன்செயலில் ஈடுபட்ட ஏனைய தி. மு. க. அமைச்சர்களும் பதவி விலக வேண்டும்.

அதுவரை எமது எதிர்ப்பு இயக்கம் சட்டசபைக்குள்ளேயும் வெளியேயும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இப்படி செல்வி ஜெயலலிதா சொன்னார். (ஒ-எ)

## தமிழக சட்டசபையில் நேற்று

## அ.தி.மு.க. உறுப்பினர்கள் எவருமேசமுகமளிக்கவில்லை

சென்னை, ஏப்ரல் 12

தமிழ்நாடு சட்டசபைக் கூட்டம் நேற்று நடந்தபோது அ. தி. மு. க எம். எல். ஏக்கள் எவரும் சமுகமளிக்கவில்லை.

14 அ. தி. மு. க உறுப்பினர்கள் மீது ஒருவாரகாலத் தடை விதிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஏனைய அ. தி. மு. க எம். எல். ஏக்களும் நேற்று சட்டசபைக்குச் செல்லவில்லை.

14 பேர் மீதான தடை நீக்கப்படும் வரை அ. தி. மு. க முற்றாக சட்டசபையைப் பகிஷ்கரிக்கும் என்று அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார். (ஒ-எ)

## கரவெட்டியில் தேடுதல்

கரவெட்டி, ஏப்ரல் 12

கடந்த திங்கட்கிழமை கரவெட்டி தெற்கு, கிராய்ப்பிள்ளையார் கோவிலடி ஆகிய பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு, தேடுதல் மேற்கொள்ளப்பட்டன.

தேடுதலின்போது சிலர் முகாமுக்குக் கூட்டிச்செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதைத்தொடர்ந்தே தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (ஒ-70-160)

## இந்திய இராணுவத் துருப்புக்கள் மேலும் விலக்கிக்கொள்ளப்படும்

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து மேலும் அமைதிப்படைத் துருப்புக்களை விலக்கிக்கொள்ளப்போவதாக இந்தியா நேற்று அறவித்தது.

தற்போது உருவாகி வரும் சூழ்நிலையில் அங்கிருந்து துருப்புக்களை விலக்கிக்கொள்ளும் சாத்தியம் ஏற்பட்டிருப்பதாக அரசுப் பேச்சாளர் நேற்றுப் புதுடில்லியில் தெரிவித்தார்.

கூடுதல் அமைதிப்படைப் பிரிவுகள் வருகிற வாரங்களில் விலக்கிக்கொள்ளப்படும். இது சம்பந்தமாக அரசு ஏற்கனவே முடிவு செய்துவிட்டது.

இப்படி அரசுப் பேச்சாளர் மேலும் சொன்னார். (அ-எ)

### பெனஸிரின் விசேட செய்தி

கொழும்பு, ஏப் 12

பாகிஸ்தானின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் நேற்றுஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து பிரதமர் பெனஸிர் பூட்டோவின் விசேட செய்தி ஒன்றைக் கையளித்தார். [ஒ-எ]

### முச்சந்தி முரளி



ஓம் ஓம், மஜோரிட்டி இருந்தால் என்ன சனியனையாகுதல் கொண்டு வந்து நிறைவேற்றலாம் தானே ...... உதில என்ன ......?

## 50 அதிகப்படி வாக்குகளினால் 'பட்ஜெட்' நிறைவேறியது

கொழும்பு, ஏப்ரல் 12

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் 50 பெரும்பான்மை வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 122 எம்.பிக்கள் வாக்களித்தனர்.

எதிராக சுதந்திரக்கட்சி, ஐக்கிய சோஷலிச முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றைச் சேர்ந்த 72 எம். பிக்கள் வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்கள் வாக்களிக்காமல் நடுநிலை வகித்தனர்.

நாடாளுமன்றம் இம்மாதம் 25 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது. [உ-எ]

## வீ. எம். வீதிவாழ் மக்கள் வீடுகளுக்கு திரும்புகின்றனர்

### வெளியேற்ற உத்தரவு வாபஸ்

வல்வெட்டித்துறை, ஏப்.12

பருத்தித்துறை வீ. எம்.வீதியில் வாழும் மக்களை இன்று புதன்கிழமை 12ஆம் திகதிக்கு முன்னர் அவர்களின் இல்லங்களைவிட்டு வெளியேறுமாறு விடுக்கப்பட்ட உத்தரவு வாபஸ்பெறப்பட்டது.

அதைத்தொடர்ந்து முந்திய அறிவிப்பின் பிரகாரம் தங்கள் வீடுகளைவிட்டு ஏற்கனவே வெளியேறிய மக்கள் பலர், கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தமது வீடுகளுக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்நகரில் புத்தாண்டு விற்பனை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

யாழ் நகரில் புத்தாண்டு விற்பனை மும்முரமாக நடைபெறுகிறது. இதனால் நகரில் சன நெரிசல் ஏற்பட்டுள்ளது. [ஒ]

## யுத்த நிறுத்தம்; புலிகள் நிராகரிப்பு

இலங்கை அரசு விடுத்த ஒரு வார யுத்த நிறுத்த வேண்டுகோளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழு சென்னையில் இருந்து விடுத்துள்ள ஓர் அறிக்கையிலேயே இந்த நிராகரிப்பு அறிவிப்பு விடுக்கப்பட்டதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இலங்கை அரசு அறிவித்துள்ள ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம், ஆயுதங்களைக் கையளிக்கும்படி தமது இயக்கத்தை வற்புறுத்தும் ஒரு பாசாங்குத் திட்டமே அன்றி வேறொன்றும் இல்லை.

- இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ராணுவ உயர் அதிகாரியின் சகோதரர் நேற்றுக் கொலை!

### ஜே. வி பியின் பழிவாங்கலாம்

கொழும்பு, ஏப்ரல் 12

தென் மாகாண இராணுவ இணைப்பு அதிகாரி லெப்டினன்ட் அல்கமவின் சகோதரர் சரத் அல்கம என்பவர் நேற்று நுகேகொடையில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஜே. வி. பி. இயக்கத் தலைவர் ரோஹண விஜயவீராவின் சகோதரி ஒருவர் தென்மாகாணத்தில் வைத்து இராணுவத்தினரால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்துக்கு பழிவாங்கலாகவே சரத் அல்கம கொல்லப்பட்டார் என்று சொல்லப்படுகிறது.

ஆனால் ரோஹண விஜயவீராவின் சகோதரி தென் மாகாணத்தில் கொல்லப்பட்ட செய்தியில் உண்மை இல்லை என்று வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார். (உ-எ)

## உள்ளூர் தொலைக்காட்சி சேவை: மாணவர்கள் பெரிதும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

யாழ் குடாநாட்டின் சில பகுதிகளில் மீண்டும் உள்ளூர்த் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்தச் சேவைகள் ஒரு குறிப்பிட்ட நேரம் என்றில்லாமல் —ஒழுங்கில்லாமல்— காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ இளையோர், முதியோர், ஆண்கள், பெண்கள் அனைவர் இதயங்களிலும் ஆன்மீகச் சிந்தனையை வளர்க்கவும் —

★ ஞானக் கருத்துக்களைப் பரப்பி இந்து சமய வளர்ச்சிக்கு உதவவும் —

உதயன் வெளியீட்டகத்திலிருந்து எழுகின்றது

★ ஞானக்கதிர் ★

புத்தாண்டுடன் மலர்கிறது
புதிய இந்துமத மாத மஞ்சரி

★ ஞானக்கதிர் ★

தலைசிறந்த சமய எழுத்தாளர்களின் ஆழமான ஆன்மீகக் கருத்தோவியங்களுடன் முதலாவது இதழ் வெளிவருகிறது.

உங்கள் பிரதிக்கு உதயன் முகவர்களிடம் இன்றே பதிவுசெய்து கொள்ளுங்கள் !

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனை

**கோழிக்குஞ்சு விநியோகம்**
Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் Hy-line கறுப்பு வெள்ளை, Silver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/ புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
[சி/2088

பெற்றோலில் இயங்கும் காட்டுமரங்கள், பனைமரங்கள் தறிக்கும் புதிய இயந்திரம் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. சணன், கல்வளை, சண்டிலிப்பாய். (101]

வீடியோ கமெரா JVC GXN 70E, நஷனல் டெக் 180, வீடியோ மிக்ஷர் SI மொடல் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: புலவர் வீடியோ, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
(10528)

**கோழிக்குஞ்சு விற்பனைக்கு**
Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Golden omet சிவப்புப்பேட்டுக்குஞ்சுகள், Hy-line கறுப்பு வெள்ளை Silver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் (C/2135)

Broiler இறைச்சிக்கோழிகள், பேட்டுக்கோழிகள், சேவற்கோழிகள், சூப்குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம்செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/2136)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**
Broiler பேட்டுக்கோழி சேவல், சூப் குஞ்சு விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம்பர பலகை உண்டு. Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-2087)

**மலிவு விற்பனை**
அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!! புதுவருட மலிவு விற்பனை (4-4 89 - 13-4-89.) புதியடிசைன்ஸ்கேட், பிளவுஸ் Baby Shirt, Baby Frocks, சிறிய கவுண்கள் மற்றும் றெடிமேட் ஆடைகள், "Fashion Garments" 20. 22. கடைச்சாமிவீதி, (Off Navalar Road), யாழ்ப்பாணம்.
(10502)

**விசேட கழிவு**
சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574

**UPLANDS FARM**
Lohmann Dekalb பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், பிறவுண் சேவல்குஞ்சுகள் சகாய விலைக்கு (12-04-89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். சொண்டு வெட்டப்பட்டது தடுப்பூசி போடப்பட்டது முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்)
[48]

## தேவை

நல்லநிலைமையிலுள்ள அச்சு யந்திரம் கட்டர் இதனுடன் சேர்ந்த தளபாடங்கள் தேவை. கடித மூலம் விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். ஆ. ஸ்ரீரங்கநாதன், 289, மத்திய வீதி, திருக்கோணமலை [105]

யாழ்நகரிலுள்ள பிரபலமான நகைக்கடை ஒன்றுக்கு சகல நகைவேலைகளும் தெரிந்த நகைத் தொழிலாளி ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் பிணைப்பணம் செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும். முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும், 484, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (124)

**எவர்சில்வர் தயாரிப்புகள்**
இல்லத்தரசிகளே! Gas அடுப்பிலோ, மின்அடுப்பிலோ சமைப்பதற்கேற்ற கண்ணைக் கவரும் பல்வகை தரமான எவர்சில்வர் பாத்திரங்களுக்கு தவறாமல் நாடுங்கள்: "Rajz Brand" எங்கும் விற்பனையாகின்றன. பல விதமான அளவுகளிலும் டிசைன்களிலும் அடுக்குச் சட்டிகள், தாச்சிகள் Frying Panகள் இன்னும் பல. காட்சி அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (சி-1898)

**தவறிவிட்டது**
சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நமசிவாய சேயோன் ஆகிய எனது அடையாள அட்டையின் இல. 650581253V போர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் அலுவலகத்தில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (10524)

Order 7972 Bill இல் 10262 மேற்படி இலக்கங்களைக் கொண்ட இரண்டு மஸ்கன் கொம்பனி பற்றுச்சீட்டுக்கள் பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டன. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (10523)

**மேசன் தொழிலாளர் தேவை**
மேசன்மாரும் உதவியாளரும் வெளி இடத்தில் உள்ளவர் விரும்பத்தக்கது. உணவும் தங்கும் இட வசதியும் உண்டு. வேலைக்கு ஏற்ற கூலி வழங்கப்படும். தொடர்பு: V. S. தங்கராசா கட்டிட அமைப்பாளர், முருகன் இல்லம், தும்பளை, பருத்தித்துறை.
(10513


**TYPEWRITER**
தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### முதலாவது ★ பிறந்த தின வாழ்த்து ★

**செல்வி சுதர்சினி (சுதா)**
12 - 04 - 89

மன்னார் வேளாங்கண்ணி வீதியைச் சேர்ந்த புலேந்திரன் சகுந்தலேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி சுதர்சினி (சுதா) தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 12-04-89 இல் தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, மூதூர் கூனித்தீவு அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், அத்தைமார், மன்னார் வெள்ளை சித்தப்பா, அத்தான் விஜேந்திராஜ் மற்றும் உற்றார், உறவினர் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.
[10530]

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**கந்தப்பு தவராசா**

மலர்வு: 22 - 04 - 962
உதிர்வு: 13 - 03 - 1989

எனது மகன் தவராசா அவர்களின் அந்தியேட்டியும் வீட்டுக் கிருத்தியமும் இன்று நிகழ்வுறுகின்றது.
அவரின் மறைவின் பொழுது பலவகையில் உதவி புரிந்த அனைவருக்கும், உடனிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் ஏனையோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆ. கந்தப்பு,
[கட்டைவேலி / நெல்லியடி ப.நோ.கூ.ச.]
குடும்பத்தினர்.

யார்க்கரு,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
12 4. 1989
[10531]

# விவசாய மூலவளங்களை சரியாகப் பயன்படுத்தினால் அதிக இலாபம் அடையலாம்

கோப்பாய், ஏப். 12
"இப்பகுதியில் விவசாய மூலவளங்கள் நிறைய உள்ளன. இம் மூலவளங்களை சரியாகப் பயன் படுத்தினால் நிறைய இலாபத்தைப்பெறமுடியும்."

உரும்பராயில் நடைபெற்ற ஜனசக்தி கருத்தரங்கில் உரை ஆற்றிய கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. ஐ. குலேந்திரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. குலேந்திரா தனது உரையில் மேலும் கூறியதாவது:-

திராட்சை, தக்காளி, மாம்பழம் ஆகிய பழவகைகள் எமது பகுதியில் தாராளமாகக் கிடைத்தும் நாம் கொழும்பிலிருந்து வரும் 'ஜாம்' வகைகளையே உபயோகித்து வருவது மிகவும் கவலைக்குரியது.

இப் பழக்கத்தை நாம் மாற்ற வேண்டும்.

வறுமை ஒழிப்பு நிவாரணமாகக்கிடைக்கும் பணத்தை மூலதனமாகப் பயன்படுத்தி பழரசங்களைத் தகரத்தில் அடைத்து விற்பனை செய்யும் சிறியகைத்தொழில்களை ஆரம்பிக்கமுடியும்.

பல விவசாயிகளின் பிள்ளைகள் வறுமை காரணமாகப் பாடசாலை செல்லாது சிறுவயதிலே நின்றுவிடுகின்றனர். இனிமேல் உங்களுக்கு இந் நிலைமை ஏற்படாது.

சுய தொழில்களில் பெறும் பணத்தை விஞ்ஞானதொழில் நுட்பத்துறைகளில் முதலீடு செய்யும் போது போதியளவு பொருளாதார வளம் கிடைக்கும்.

இப்படி அவர் கூறினார்.
[ச-72]

# பாலர் பாடசாலைப் பொறுப்பு ஆசிரியைகளுக்கே உரியது

குருநகர், ஏப்ரல் 12
பாலர் பாடசாலைகளை நடத்தும் பாரிய பொறுப்பு ஆசிரியைகளுக்கே உரியது. ஆசிரியைகள் சமூக முன்னேற்றத்துக்கும் உதவ வேண்டும்.

யாழ் சர்வோதய வெளி மண்டபத்தில் நடைபெற்ற பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய சர்வோதய வடமராட்சிப் பொறுப்பாளர் திரு பி. தில்லைநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கருத்தரங்கிற்கு வடபகுதி சர்வோதய வெளிக்கள இயக்குனர் திரு. சி. சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

திருவாளர்கள் நகுலேஸ்வரலிங்கம், ஆர். சிவநேசன், செல்விகள் சுந்தராம்பாள் சிவப்பிரகாசம், சாரதா சுப்பிரமணியம், நா. ஜெயராணி ஆகியோரும் உரையாற்றினார்கள். (இ - 51)

# கூட்டுறவுச் சங்கங்களே மக்கள் வங்கியின் எஜமானர்

நெடுந்தீவு, ஏப். 12
கூட்டுறவுச் சங்கங்களே மக்கள் வங்கியின் எஜமானர்கள். இச் சங்கங்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் வழங்க மக்கள் வங்கி எப்போதும் தயாராக உள்ளது

பல. நோ. கூ. சங்கங்களின் பொது முகாமையாளர்கள் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் அடங்கிய கூட்டத்தில் உரையாற்றிய பிரதேச மக்கள் வங்கி முகாமையாளர் திரு. எஸ். சுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. ஐ. நித்தியராஜா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.
[க-111]

# ஜனநாயகப் பாதைக்கு ஜே. வி. பி. திரும்புமானால் மீண்டும் பொதுத்தேர்தல்!

## நாடாளுமன்றத்தில் அறிவிப்பு

கொழும்பு, ஏப் 12
ஜனநாயகப் பாதைக்கு ஜே. வி. பி. வருமானால் புதிதாகப் பொதுத் தேர்தல் நடத்தவும் ஜனாதிபதி பிரேமதாஸ தயாராக இருப்பதாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தித் துணை அமைச்சர் ஆர். பி. விஜேசிறி இத் தகவலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;-

ஜனநாயக அரசியலுக்கு ஜே. வி. பி யினரைக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி சகல முயற்சிகளையும் செய்துவருகிறார். அப்படி வருவார்களானால் புதிதாகப் பொதுத்தேர்தல் நடத்தப்படும்.

ஒரு குரல்: எப்படி தேர்தலை நடத்த முடியும்.

திரு. விஜேசிறி: ஜனாதிபதியால் செய்யமுடியும்.
[உ-எ]

# பொலன்னறுவையிலிருந்து தமிழர் இடம்பெயர்வு

## வாழைச்சேனையில் தஞ்சம்

மட்டக்களப்பு, ஏப்ரல் 12
பொலன்னறுவ மாவட்டத்தில் உள்ள முத்துக்கல், கொட்டாவ ஆகிய கிராமங்களிலிருந்து சுமார் 45 தமிழ்க் குடும்பங்கள் அச்சுறுத்தல்கள் காரணமாக பாதுகாப்புக்கருதி வாழைச்சேனைக்கு இடம் பெயர்ந்து வந்துள்ளன.

காடையர்களாலும், ஸ்ரீலங்கா படையினராலும் தமிழர்கள் அச்சுறுத்தப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா படையினரால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட 12 பேர் பலமாகத் தாக்கப்பட்ட நிலையில் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேத்தாளை விபுலானந்தர் வித்தியாலயத்திலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள இவர்களுக்கு சமூக சேவைத் திணைக்களத்தினால் நிவாரணம் வழங்கப்படுகின்றது. (ஓ-21)

# மேற்குஜேர்மனி செல்ல 16 வயதுக்கு உட்பட்டோரும் விஸா பெறவேண்டும்

கொழும்பு, ஏப்ரல் 12
மேற்கு ஜேர்மன் செல்ல பதினாறு வயதுக்குட்பட்ட இலங்கைக் குழந்தைகளுக்கும் விஸாபெற வேண்டும்.

மேற்கு ஜேர்மனி அரசு ... கம் இன்று அறிவித்தது.

விசா இல்லாமல் மேற்கு ஜேர்மனிக்கு 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் செல்வது அதிகரித்துள்ளதைத் தடுக்கு முகமாக புதிய நிபந்தனையை மேற்குஜேர்மன் அரசு அறிவித்தது. (இ-எ)

# போலந்து தேர்தல்

வார்ஸோ, ஏப்ரல் 12
வருகிற ஜூனில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடும்படி தனது உறுப்பினர்களை சொலிடாரிட்டி தொழிற்சங்கம் கேட்டுள்ளது.

போலந்தில் ஜனநாயக அடிப்படையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த கம்யூனிஸ்ட் அரசு முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

# ஆசிரியர்கள் தேவை

## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய்.

உடனடியாக பின்வரும் தகைமைகளை உடைய ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். 21-04-1989 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வாரநாட்களில் மு. ப. 9-00 மணிக்கும் 11-00 மணிக்கும் இடையில் என்னுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

1. G. C. E. [A. L.] வகுப்புகளுக்கு விலங்கியல் படிப்பித்த அனுபவமுள்ள பட்டதாரிகள்.
2. G. C. E. [A. L.] வகுப்புகளுக்கு வர்த்தகம் படிப்பித்த அனுபவமுள்ள பட்டதாரிகள்.

சி. வே. மஹேஸவேலு
அதிபர்.

10-04-1989.
[சி/2198]

### அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் : 22 10.1912

மறைவு : 14.03.1987



**திரு. கனகசபை பொன்னையா**

14-03-1989ஆம் தேதியன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கனகசபை பொன்னையா அவர்களின் அந்தியேட்டி 12-04-1989 புதன்கிழமையன்றும் வீட்டுக்கிருத்தியம் 13-04-1989 வியாழக்கிழமையன்றும் நிகழும், அந்நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அவரது ஈமக்கிரியைகளிற் கலந்தும், ஆறுதல் கூறியும், மற்றும் உதவிகள் புரிந்தும் மகிழ்வித்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்,
(பப்பன்)
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(10532)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**நடராசா நேசராசா**
(ஜோய்ஸ் பார்மஸி உரிமையாளர்)

தாயின் மடியில்: 1959 - 07 - 19
மண்ணின் மடியில்: 1988 - 03 - 25

எல்லாருக்கும் இனியவன் ஈகையாளன்
எவர் மனத்தும் குடியிருக்கும் கனிந்த நெஞ்சன்
கல்லார்க்கும் கற்றவருக்கும் களிப்பையூட்டும்
காவியத்தின் நாயகன் போல் விளங்கும் தீரன்
வல்லாளன் எம் தலைவன் நேசராசா
வாழ்க்கைத் துணைவி மாலினியின் வழியை நோக்கி
கல்லாத மனத்தாரும் கரையும் வண்ணம்
காணரிய ஈசனடி சேர்ந்தார் வாழி!

உங்கள் பிரிவால் துயருறும்:
தகப்பன், தாய்,
சகோதரர், சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனி, மாமன், மாமி, மச்சான்மார்,
உறவினர்கள், நண்பர்கள்.

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.
[130]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க உத்தியோகத்தர்களின் வீட்டுவசதி விவரங்கள் திரட்டப்படுகின்றன

கொழும்பு, ஏப் 12

அரசாங்க உத்தியோகத்தர்களின் வதிவிடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் அரசாங்க நிர்வாக அலுவலக அமைச்சு அரச சேவையாளர்கள் பற்றிய விவரங்களைக் கோரியுள்ளது.

அரசாங்க நிர்வாக, மாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் இது தொடர்பாக சுற்றுநிருபம் அனுப்பி உள்ளது.

அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து பின்வரும் விவரங்களைப் பெற்று இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் திணைக்களத் தலைவருக்கு அனுப்பி வைக்குமாறு சுற்று நிருபத்தில் கேட்கப் பட்டுள்ளது.

சுற்று நிருபம் விவரம் வருமாறு:

1. இந்நாட்டின் எப்பகுதியிலும் தங்களுக்குச் சொந்தமான வீடு கட்டக்கூடிய ஒரு காணியை அல்லது வீட்டை வைத்திராத (வாழ்க்கைத் துணையையும் சார்ந்திருக்கும் பிள்ளைகளையும் உள்ளடக்கி) உத்தியோகத்தர்களின் பெயர்கள்.

2. நாட்டின்எப்பகுதியிலும் வீடு கட்டக்கூடிய ஒரு காணியை வைத்திருக்கும் ஆனால் வீட்டை வைத்திராத (வாழ்க்கைத் துணையையும் சார்ந்திருக்கும் பிள்ளைகளையும் உள்ளடக்கி) உத்தியோகத்தர்களின் பெயர்கள்.

இத்தகைய உத்தியோகத்தர்களின் விவரங்களை ஒரு சத்தியக் கடதாசி வடிவத்தில் அனுப்பி வைக்குமாறு அமைச்சு கேட்டுள்ளது.

அரசாங்க சேவையிலுள்ள [சிறு, உப நிலை, பதவி நிலை] தரங்களின் 1 ஆம் பந்தியினதும், 2 ஆம் பந்தியினதும் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அட்டவணைகளை ஏப்ரல் 30 அம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைக்குமாறும் அமைச்சு கேட்டுள்ளது. (இ-7)


## பிறந்த நாள் வாழ்த்து



★ ★

### செல்வி சிவதர்ஷினி சிவகுமாரன்


இன்று (12 - 04 - 1989 இல்) தமிழ்ஈழ மண்ணின் புதுமலர் தங்கத்தமிழ் செ வியான சிவகுமாரன்-சாந்தரூபினி தம்பதிகளின் அன்பு மகள் சிவதர்ஷினி முத்துப் புன்னகை மலர்ந்திட தமது 2 ஆம் வயதினில் அடி எடுத்துவைக்கிறார். அவரது தும்பளை இல்லத்தில் தமது பிறந்த தினத்தை சிறப்புடன் கொண்டாடும் சிவதர்ஷினியை நெல்லண்டை அம்பாள், வல்லிபுர ஆழ்வார் துணைபெற்று பல்லாண்டுவாழ வாழ்த்துவோர் அவரது அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா (R. S. இராமநாதன்). அப்பம்மா, ஐயா (V. துரைசிங்கம்), அம்மம்மா, மாமாமார், அண்ணன்மார், சித்திமார், நண்பர்கள், உற்றார், உறவினர்கள். [10411]


## ஐ. நா. சங்க கடன் உதவி

நெடுந்தீவு மேற்கு சாராப்பிட்டி ஐ. நா. சங்கம் தனது உறுப்பினர்களுக்கு துவிச்சக்கர வண்டி கடன் உதவியாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மேற்படி சங்கத்தின் பொருளாளர் திரு. ந. நடராசா தெரிவித்தார். (க -111)

## பதவி உயர்வு

சாவகச்சேரி நகரசபை பொது நூல் நிலையத்தில் உதவி நூலகராகக் கடமையாற்றிய ந. ஸ்ரீகாந்தா மன்னார் பிரதேச சபை திருக்கேதீச்சரம் உப அலுவலக பொது நூல் நிலையப் பொறுப்பாளராகபதவி உயர்வு பெற்றுள்ளார். (க - 117)



நாதஸ்வர சகோதரர்கள் வீ. கே. கானமூர்த்தி, வீ. கே. பஞ்சமூர்த்தி ஆகியோர் இணையின் வெள்ளிவிழா சமீபத்தில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்ற பொழுது பிடிக்கப்பட்ட படங்கள்.

முதலாவது படத்தில் முரசொலி ஆளுநர் நாயகம் திரு. ம. சிவராசா மலர்முடிசூட்டுவதையும்-

இரண்டாவது படத்தில் உதயன், சஞ்சீவி நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் பொன்னாடை போர்த்துவதையும்-

மூன்றாவது படத்தில்இணுவையூர் என். வீரமணி ஐயர் பாராட்டுப்பத்திரம் வழங்குவதையும் காணலாம். [இ-10]

# ஆசிரிய இடமாற்றம், பதவி உயர்வு பாரபட்சமாகவே நடைபெற்றுள்ளன

## ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 12

"கடந்த காலங்களில் ஆசிரிய இடமாற்றம், பதவிஉயர்வு முதலியன ஒரு திட்டமற்ற முறையிலே பாரபட்சமாக நடைபெற்றுள்ளன. இதனால் ஆசிரியர்கள் பெரிதும் விரக்திக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இலங்கை ஆசிரியர் சங்கம் என்றுவது சலுகைகளுக்காக அதிகாரிகளின் பின்சென்றதில்லை. ஆசிரியர்களின் உரிமைகளைப் போராடியே வென்றெடுத்துள்ளது".

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையான வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது சங்கச் செயலாளர் திரு.வே.சிவராசா மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத் தலைவர் திரு. த. தேவராசா கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு. சிவராசா தனது உரையில் மேலும் கூறியதாவது:-

எமது பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் மாணவர்களின் கல்வி பெரும் பாதிப்படைந்துள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள் தொடர்பான விடயங்கள் சீராக நடைபெறவில்லை. ஆசிரியர்கள் பாடசாலை மட்டத்தில் எமது கல்வியின் நிலையை ஆராய்ந்து ஆலோசனைகள் வழங்குவதன் மூலம் எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவலாம்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு எமது சங்கம் ஏனைய தொழிற் சங்கங்களுடன் இணைந்து அனைத்துப் போராட்டங்களிலும் பங்கு பற்றி வந்துள்ளது. நீண்ட காலத்துக்கு முன்பே இலங்கை ஆசிரியர் சங்கம் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையையும் வடக்கு, கிழக்கு மாகாணம் அவர்களின் தாயகம் என்பதையும் ஏற்று அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகக் குரல் கொடுத்து வந்துள்ளது. இன்று அரசு பிரச்சினைகளைத் தீர்க்காது காலம் கடத்தி வருகிறது.

எமது சங்கம் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தொடர்ந்தும் ஏனைய தொழிற் சங்கங்கள் வெகுசன அமைப்புக்களுடன் இணைந்து செயலாற்றும்.

இப்படி அவர் கூறினார். (ச)

## நிரந்தர கிராம சேவகர் நியமனம் இல்லை

மாங்குளம், ஏப்ரல் 12

பருத்தித்துறை புலோலி மேற்குப் பகுதியில் நிரந்தர கிராம சேவகர் நியமிக்கப் படாததால் இப்பகுதி மக்கள் தமது முக்கிய கருமங்களை உடன் செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளனர் என அறியப்படுகிறது. (க-94)


# செலிங்கோ ரவல்ஸ் லிமிட்டட் (CEYLINCO TRAVELS LTD)

மீண்டும் யாழ்நகரத்தில்.........
உங்கள் சேவைக்காக

த பினான்ஸ் கம்பனி கட்டடத்தில்
6. 4. 1989 தொடக்கம் செயல்படுகின்றது.

உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான கட்டணத்தில்

★ விமான ரிக்கட்டுகள் (Air Tickets)
★ பிரயாண காசோலைகள் (Travellers Cheques)
★ பிரயாண ரிக்கட் உறுதிப்படுத்தல் (Reconfirmation)
★ திகதி நிர்ணயித்தல் (Booking Date for Open Tickets)

இவை அனைத்தும் யாழ் நகரில் இருந்து கொண்டே நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பயணம் சிறந்த முறையில் அமைய எங்களுடன் தொடர்பு கொள்க.

**செலிங்கோ ரவல்ஸ் லிமிட்டட்,**
த பினான்ஸ் கம்பனி கட்டடம்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**CEYLINCO TRAVELS LTD.,**
The Finance Company Building,
49. Power House Road,
JAFFNA.
Telephone: 22089. 23680.

தலைமை அலுவலகம்:

**செலிங்கோ மாளிகை**
கொழும்பு - 1

*Ceylinco House*
COLOMBO - 1
TELEPHONE: 545531, 545532, 545533, 549980.

சவுத் ஏசியன் ரவல்ஸ் லிமிட்டட்,
பிரதான ஏஜன்ஸ்,
குவெயிற் ஏயர்வேஸ் கோப்பரேசன்.

South Asian Travels Ltd..
General Sales Agent For
Kuwait Airways Corporation.

[19]



An associated The Maharaja Organisation Limited 1939-1989 50 YEARS The courage to be different.

பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
**S-Lon** எஸ் லோன் என்று கேட்டு
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

S-Lon The No.1 PVC pipe




SLS

உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

**S-Lon Lanka (Pvt) Ltd.**
467, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 556206 — 93716 - 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90ஆம் நாள நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



ஆண்டவன் படைப்பு:

13- 04- 1939

● ● ●

ஆண்டவன் அணைப்பு:

13- 01- 1989

அமரர்

### திரு. சின்னத்தம்பி கோவிந்தசாமி

(கலைஞர்]

வடலியடைப்பு மண்ணில் அவதரித்து, அம்மண்ணின் பெருமைக்கும், சமயநெறி உயர்வுக்கும், தெய்வ பக்திக்கும், கலைஞானத்துக்கும், தத்துவ வித்தசஞய், குடும்ப பாசத்தின் உறைவிடமாய் மிளிர்ந்த அன்னுர் - இன்று இ[illegible]யடியில்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்கின்ருேம்.

தங்கள் நினைவால் வாடும்;

மனைவி, மக்கள், சகோதரர்கள்
மைத்துனர்மார், உற்ருர், உறவினர்கள்.

சங்கானை மேற்கு,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு

[121]

## நன்றி செலுததும் ஆராதனை



முன்னுள் உடுப்பிட்டி திருச்சபை சிறுவர் பாடசாலை ஆசிரியர்கள்,

திருமதி
### எலிசபெத் ஜெயராணி விஜயதாசன்

திருமதி
### ஜோயிஸ் அதிசயராணி தவராசா

தோற்றம்: 28 - 04 - 1957          தோற்றம்: 07 - 10 - 1948

மறைவு:
15-02 1989

இடம்: அன்னுரது இல்லம், யாழ் வீதி, உடுப்பிட்டி
காலம்: 13- 04- 1989 வியாழன் காலை 9.00 மணி

● மேற்படி ஆராதனைக்கு சமுகம் தரும்படி யாவரையும் அழைக்கின்ருேம்.

திருமதி M. N. வீரவாகு (தாய்)
திரு. T. விஜயதாசன் (கணவன்)
விஜயரூபன், ஜெயரூபன் [பிள்ளைகள்)
திரு. P.S, தவராசா [[illegible]]
ஜெ[illegible]தர்சன் [பிள்ளை]

திரு. V. G. கனகசிங்கம்
வண. V. N. தர்மகுலசிங்கம்
திரு. V. G. பாலசிங்கம்
திரு. V. J. இராசசிங்கம்
(சகோதரர்கள்)

(10299)

# ★ வெளிநாட்டு வேலைவாய்ப்பு ★

**1. சவூதி அரேபியா**

சாதாரண தொழிலாளி முதல் சகல தரப்பிலுள்ள வேலையாட்களுக்கும் வெற்றிடங்கள் உண்டு.

**2. குவைற்**

கிளினேர்ஸ் வேலையாட்கள்.

**3. யப்பான்**

யப்பான் நாட்டில் நாங்கள் முன்னர் எடுத்த கட்டிடப் பகுதி வேலையாட்கள், றெஸ்ரோறன்ற் (Restaurant) வேலையாட்கள் யாவரையும் தொடர்ந்தும் எடுத்துக் கொண்டிருக்கிருேம் என்பதனையும் எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்ருேம்.

● யப்பான் நாட்டிற்குப் போக விரும்பும் யாவரும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

## VACANCIES IN OMAN

| No | Category | Position | Salary | Age Limit | Experience |
|---|---|---|---|---|---|
| 1. | Doctors MD-M,R.C.P. Qualified Doctors, Physicians | 2 | US, S 1500 | Under 45 yrs. | |
| 2. | Doctors, MRCOG Qualified Obstretician and Gyanecologist | 2 | US. S 1500 | Under 45 yrs | |

**Category No. 1 and 11 Couple Preferred**

| No | Category | Position | Salary | Age Limit | Experience |
|---|---|---|---|---|---|
| 3. | Doctors, M B.B.S. Qualified | 5 | US. S 1000 | Under 45 yrs. | 5 yrs. |
| 4. | FEMALE NURSES General Nurses or Qualified | 12 | O.R. 148-30 | Under 35 yrs. | 5-7 yrs. |
| 5. | ACCOUNTANTS | | | | |
| (A) | Chartered Accountants | 2 | O R. 200 30 (200-250) | Under 40 yrs. | 5 yrs. |
| (B) | ICMA Qualified Accountants Diploma in Accountancy Qualified Accountant | 5 | O,R. 120 | Under 40 yrs. | |

| No | Category | Position | Age | Food/Acc. | Experience | Salary |
|---|---|---|---|---|---|---|
| 7. | Electrical Engineer with or without GULF Experience | 5 | Under 40 | Free | 5 yrs. | O R. 180 250 |
| 8. | Civil Engineer with or without GULF Experience | 3 | Under 40 | Free | 5 yrs | O. R. 180-200 |
| 9. | Air Conditi n Engineer for A Central plant with or without GULF Experience | 2 | Under 40 | Free | 5 yrs. | Negotiable |
| 10. | Air Condition Engineer Windom without GULF Experience | 2 | Under 40 | Free | 5 yrs. | Negotiable |
| 11. | Electrical Foreman Hightension law Tension supply | 5 | Under 35 | Free | 5 yrs. | O R. 80-100 |
| 12. | Electrical Line Man High Voltage | 20 | Under 35 | Free | 5 yrs | O. R. 60 70 |
| 13. | Cable Jointer | 10 | Under 35 | Free | 5 yrs | O R 70-80 |
| 14. | Givil Foreman | 03 | Under 35 | Free | 5 yrs. | O. R. 90-100 |
| 15 | Diesel and petrol Mechanic with GULF Experience | 10 | Under 35 | Free | 5 yrs | O R 100-110 |
| 16. | Swerance plumber with or without GULF Experience | 5 | Under 35 | Free | 5 yrs. | O. R. 120 |
| 17. | Air Condition Mechanic for a Central Plant with or without GULF Experience | 4 | Under 35 | Free | 2 yrs. | Negotiable |
| 18. | Lift Mechanics with or without GULF Experience | 5 | Under 35 | Free | 5 yrs. | Negotiable |
| 19. | Heavy Equipment Operator | | | | | |
| A. | Crane Operator (Tower and Mobile) | 5 | Under 35 | Free | 5 yrs. | O.R. 80-90 |
| B. | Dozer Operator | 5 | Under 35 | Free | 5 Yrs | O.R. 80-90 |
| C. | Fork Lift Operator | 4 | Under 35 | Free | 4 Yrs | O R 80-90 |
| D. | Shovel Operator | 3 | Under 35 | Free | 3 Yrs | O.R 80-90 |
| 20. | Carpenter | 15 | Under 35 | Free | 05 Yrs | O.R 50 60 |
| 21. | Mason | 10 | Under 35 | Free | 05 Yrs | O.R 50-60 |
| 22. | Plumber | 8 | Under 35 | Free | 05 Yrs | O.R 50 60 |
| 23. | Welder | 11 | Under 35 | Free | 05 Yrs | O.R 50-60 |
| 24. | Heavy Vechicle House Driver | 10 | Under 35 | Free | 05 Yrs | O.R 50-60 |
| 25. | Heavy Vechicle Driver | 12 | Under 35 | Free | 05 Yrs | O.R 70-90 |
| 26. | House Boys | 12 | Under 35 | Free | 05 Yrs | O.R. 45 |
| 27. | House Cooks Male (A) Asian Cooks (B) Confidental Cooks | 12 | Under 35 | Free | 05 Yrs | O. R. 50 |
| 28. | House Maids Muslim | 23 | Under 21-35 Yrs | Free | 05 Yrs | O.R 45 |
| 29. | House Maids Catholic Christians | 28 | Under 21-35 Yrs | Free | 05 Yrs | O.R 45 |
| 30. | Steel Fitter | 10 | Under 35 Yrs | Free | 05 Yrs | O.R 50 60 |
| 31. | Tile Cutter | 05 | Under 35 Yrs | Free | 05 Yrs | O.R 50-60 |

## T. V. TRAVELS

**Brown Road,
KOKUVIL.**

[சி/2093]

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### ரவீந்திரன் தங்கவேல் (ரவி)

(தீபன்)

அன்னை மடியில்: 14-04-1968          மண்ணின் மடியில்: 26-02-1989

எம் இதயத்திலே எம் உயிரிலே
ஒன்ருகக் கலந்து
எம் எல்லோரையும் தவிக்கவிட்டு
நீ வெகு தூரம் போனதேனையா
அன்பின் பிறப்பிடமே, உன் அன்பால்
உன் இனிமையான சுபாவத்தால்
நீ எல்லோருடனும் நண்பனுனுய்
அது அழியாத உறவு
ஆனல் உன் இழப்பு, எம் நெஞ்சைவிட்டகலாது
உன் நினைவு தீபமாக மிளிரும்.

நல்லூர்.
[10519]

உம் பிரிவால் துயருறும்:
உற்ருர், உறவினர், நண்பர்கள்,

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13 02-1922          மறைவு: 24-03-1988

கொடிகாமம்

### திருமதி மகேஸ்வரி குமாரசுவாமி

காலம் தானேடி ஓராண்டு சென்றதம்மா, களங்கமற்ற முகமோ கண்மு[illegible]னே நிற்கிறதே! அன்பு காட்டி வளர்த்த எம்மையெல்லாம் ஆருத்துயரி[illegible] விட்டுச் செல்ற போதும் உங்கள் நினைவோ எம் நெஞ்சை விட்டகலாதே. என்றும் உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிராத்திக்கின்ருேம்.

அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

''மகேசவாசம்''
கொடிகாமம்.

[50]

## 2 ஆம் வருட நினைவுநாள்



### செல்வி பத்மாவதி இராமநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர், இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.)

மண்ணில்: 24-6-1926          விண்ணில்: 5-4.1987

திதி: 12-4-1989

நெஞ்சம் மறப்பதில்லை
நினைவை இழப்பதில்லை.

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல்களினால்

# பாதிப்புற்ற சுகாதார நிலையங்களை திருத்தி அமைப்பதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஏப் 12
யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகள், சிகிச்சை நிலையங்கள் மற்றும் சுகாதார அலுவலகங்கள் என்பவற்றை மீளமைப்பதற்கும் திருத்தி அமைப்பதற்குமான செலவு விவரங்கள் மற்றும் மாதிரிப் படங்கள் என்பன கோரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நச்சினார்க்கினியன் இது தொடர்பாக யாழ்.சுகாதார அத்தியட்சகரிடம் விவரம் கோரியிருக்கிறார்.

கடந்தகால அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட வைத்திய சாலைகளையும், மற்றும் பண்ணையிலுள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையம், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சுகாதார அத்தியட்சகரின் அலுவலகம் ஆகியவற்றையும் மீளமைப்பதற்கு தேவைப்படும் நிதி விவரமும் அது தொடர்பான மாதிரி வரை படங்களுமே கோரப்பட்டுள்ளன.

தற்போது கட்டடத் திணைக்களத்தின் உதவியுடன் இந்த விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ 9)

## கதிரை அன்பளிப்பு

பச்சிலைப்பள்ளி ஏப்ரல் 12
சாவகச்சேரி கச்சாய் வீதி திருவள்ளுவர் பாலர் பாடசாலைக்கு இத்தாலியில் உள்ள இவ்வூர்வாசி ஒருவர் இருபது கதிரைகளை அறவழிப் போராட்டக் குழுவின்மூலம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (க - 117)

# தீய செயலில் ஈடுபடுவதில்லையென புதிய ஆசிரியர் உறுதி எடுப்பர்

கொழும்பு, ஏப்ரல்12
புதிதாக நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் விசேட உறுதிப்பத்திரம் ஒன்றில் கைச்சாத்திடவேண்டும் என்று கல்வி அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார்.

★ மதுபானம் அருந்தமாட்டோம்.

★ தீயசெயல்களில் ஈடுபடமாட்டோம்.

—இப்படி அந்த விசேட உறுதிப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

வருகிற மாதம் 25 ஆம் திகதியன்று புதிதாக ஆசிரிய நியமனங்களைப் பெறும் 3ஆயிரத்து 600 வெளிவாரிப்பட்டதாரிகள் இந்த விசேட பிணைப் பத்திரத்தில் கைச்சாத்திட வேண்டும் என்று கோரப்படுவர்.

விரைவில் மேலும் 4ஆயிரம் பேர் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர். (ஒ-எ)

## வேலைகள் ஸ்தம்பிதம்

கிளிநொச்சி, ஏப். 12
கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டவர் இன்னும் பதவி ஏற்கவில்லை.

இதனால் கல்வித் திணைக்களப் பணிகள் பல செயற்படாமல் உள்ளன.

வெளிமாவட்டங்களில் இருந்து இடமாற்றம் பெற்று வந்த 9 ஆசிரியர்களுக்கு இன்னும் பாடசாலைகள் வழங்கப்படவில்லை.

இதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 138 ஆசிரியர்களின் வெற்றிடங்களும் நிரப்பப்படவில்லை. [ச-ரி]

## மருத்துவ மாது இன்றி அவதி

முழங்காவில், ஏப். 12
இரணைதீவுப் பகுதியில் மருத்துவமாது இல்லாமல் பிரசவத் தாய்மார் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர்.

இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பல முறை தொடர்பு கொண்டும் நிரந்தரமாக மருத்துவ மாது ஒருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை. இக்கிராமத்தில் வதியும் மாது ஒருவரை நியமிக்குமாறு இப்பகுதி பொது ஸ்தாபனங்கள் கோரி வருகின்றன.

## இ. ஆ. சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, ஏப்ரல் 12
ஆரம்பக்கல்வியைக் கட்டாயமாக்கும் சட்டம் ஒன்றைக் கொண்டு வரும்படி இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

சங்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இக்கோரிக்கையை விடுப்பது என்றுதீர்மானிக்கப்பட்டது. (எ)


## வியாபாரிகள்

வவுனியா, கிளிநொச்சி, மன்னார், தி
மட்டக்களப்பு, கல்முனை, சம்மாந்துறை
களில், சிங்கர் விவசாயக் கருவிகளை விற்பனை செய்ய வியாபாரிகள் ...

மின் உற்பத்தி ஜெனரேட்டர்கள்
நீரிறைக்கும் இயந்திரங்கள்
தராசுகள்
தெளி கருவிகள்
நெல் சூடடிக்கும் கருவிகள்
நெல் நாற்று நடும் கருவிகள்
முதலியன

நாடுங்கள்:-

விற்பனை முகாமையாளர்,
விவசாயப் பிரிவு,
சிங்கர் (ஸ்ரீலங்கா) லிமிட்டெட்,
83, சதாம் வீதி,
கொழும்பு - 1.


வறுமை ஒழிப்புத்திட்டம்:

# வறுமையைப் போக்கி நிலையான தொழிலை கொடுக்கும்

வறுமைநிலையிலுள்ளவர்கள் தமது வறுமை நிலையைப் போக்குவதோடு நிலையானதொரு தொழிலையும் பெற்றுக் கொள்ள வறுமை ஒழிப்புத் திட்டம் உதவும்.

ஏழை மக்களுக்கு உதவும் இத்திட்டம் தற்காலிகமானதல்ல நிரந்தரமானதாகும்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் சுன்னாகம் பொதுசனநூலகத்தில் வறுமை ஒழிப்புத் திட்டத்தைச்செயற் படுத்துவதற்கென நியமிக்கப்பட்ட முகவர்கள் மத்தியில் உரையாற்றும் போது மேற்கண்டவாறுகூறினார்.

திரு. மகாலிங்கம் தனது உரையில் மேலும் கூறியதாவது:-மனித வளத்தை முதலீடாகக் கொண்டு இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது.

மக்களுக்காக மக்களால் செயற்படும் இத்திட்டம் மக்களுடனும் சேர்ந்து செயல்படுவதற்குமுகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் பேசுகையில் ''எம்மை நாமே வளர்த்துக் கொள்ளும்சுய முயற்சி திட்டமாக வறுமை ஒழிப்புத் திட்டம்ஏற்படுத்தப் பட்டுள்ளது.

த்திட்டத்திற்காகச் செயல்படும் சகல நிலையிலுள்ளவர்களும் சமூகத்துடன் இணைந்து செயற்பட்டு திட்டம் வெற்றி பெற உழைக்க வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார். (ச–27)

மன்னார் பல்கலைக் கழகமாணவர் மன்ற

# பொது அறிவுப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 12
மன்னார் மாவட்ட பல்கலைக் கழக மாணவர் மன்றம் ஒழுங்கு செய்த மன்னார் மாவட்ட உயர்தர வகுப்பு பாடசாலைகளுக்கிடையிலான பொது அறிவுப் போட்டி மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் நடைபெற்றது.

போட்டியில் முதல் பரிசான 750 ரூபாவை புனித சவேரியார் பெண்கள் கல்லூரியும், இரண்டாவது பரிசான 500 ரூபாவை பெரியமடு மகாவித்தியாலயமும், 3 ஆம் பரிசான 300 ரூபாவை வங்காலை புனித ஆனாள் மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

கூடுதலான புள்ளிகளைப் பெற்று சிறந்த மாணவனாக வங்காலை புனித ஆனாள் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் எ. நிக்சன்சோரை பெற்றுக் கொண்டார்.

இவர்களுக்கான பரிசில்களை மன்னார் மாவட்டக் கல்வி அதிகாரி திரு. சந். ஏ. றகீம், வழங்கினார்.

விழாவின் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட தலைமை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எம். குருஸ் கலந்து கொண்டார்.

மன்னார் மாவட்ட பல்கலைக் கழக மாணவர் மன்றத் தலைவர் செல்வன் எம். ஆர். பிறின்ஸ் டயஸின் நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.


கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம்
முல்லைத்தீவு

கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. கேள்விப் பத்திரங்கள் யாவும் ரூபா 10/- [மீளளிக்கப்படாத பணம்] செலுத்தி சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தில் கேள்விகள் கோரப்பட்டு மீளளிப்புப் பணமாக ரூபா 100/- செலுத்துதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் யாவும் 28-04-89 ஆம் திகதிக்கு முன்பாக தலைவர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கூடுதலான கேள்விக்காரருக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்
கரைதுறைப்பற்று ப.நோ கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

[சி/2086]






வியப்பூட்டும் அம்சங்கள். விந்தையான ஸ்டீரியோ தொனிகள். விசேஷ கவர்ச்சி வடிவங்கள்.

சிங்கர்*

சிங்கர் ஓடியோ சிஸ்டம்ஸ்
தொனி இன்பத்தில் தனி மேன்மை கொண்டவை. பளிங்கு போல் தெளிவான ஸ்டீரியோ தொனிகள், பரவசமூட்டும் பற்பல அம்சங்கள், கண்ணுக்கினிய கவர்ச்சி வடிவங்களில், உங்கள் மனம் கவர் சங்கீதம், கர்நாடக இசை, மெல்லிசை, பொப்பிசை, எப்படி இருப்பினும், தொனி இன்பத்தில் தனிக கூர்மை தரவென்றே உருவாக்கிய சிங்கர் ஓடியோ சிஸ்டம்ஸ்.
கேட்கக் கேட்கத் தெவிட்டாத பேரின்பம்!

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி மகேஸ்வரி செல்வத்துரை

அன்னையின் மடியில்: 17 - 04 - 1924
ஆண்டவன் அடியில்: 04 - 04 1987

எம் அன்பின் ஒளிவிளக்கே - பாசத்தின் பிறப்பிடமே
பண்பின் இருப்பிடமே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்து சென்று
ஈராண்டு கடந்தாலும்
உங்கள் அன்பு முகம் எங்கள் இதயங்களில்
அழியாத கோலங்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டிநிற்கும்

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள்.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

(126)

சாவகச்சேரி
யூனியன் பேக்கரி உரிமையாளர்

## திரு பொன்னையா சரவணமுத்து

அவர்களின்

# ஓராண்டு நினைவு அஞ்சலி



மறைவு: 24 - 03 - 88
திதி: 12 - 04 - 89

ஆலமரமாய் நின்று எம்மை வளமாக்கினாய்
ஏணியாய் நின்று எம்மை உயரவைத்தாய்
ஒளிவிளக்காய் நின்று எம்வாழ்வில் ஒளி கொடுத்தாய்
மக்களுக்கு நல்ல மனதுடனே சேவை செய்தாய்
எல்லோர் மனதிலும் நீங்காத இடம் பெற்றாய்
யாவரையும் ஏங்கவைத்துப் பிரிந்து சென்றாய்
ஆண்டொன்று சென்றாலும் நினைவின்றும் மாறவில்லை
ஆண்டு பல சடந்தாலும் நினைவு என்றும் மாறாது.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"லக்ஷ்மி வாசா"
சாவகச்சேரி.

[116]

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள

# வறிய குடும்ப மாணவர்களின் பெயர்ப் பட்டியல் தயாராகின்றது

## உதவி வழங்க இந்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப் 11
யாழ் மாவட்ட பாடசாலைகளில் பயிலும் வறிய குடும்பங்களில் உள்ள மாணவர்களின் பெயர்ப்பட்டியல்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிப்புரையை யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி விடுத்துள்ளார்.

அண்மையில் இந்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளது போல் ஏனைய பல நாடுகளிலிருந்தும் பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் நிவாரண உதவிகள் வந்த வண்ணம் உள்ளன.

ஆனால் இவற்றை பகிர்ந்தளிப்பதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இதனை அடுத்தே இந்த பட்டியல் தயாரிக்கும் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதன்படி வருட வருமானமாக 6 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான தொகையைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் பெயர்கள் திரட்டப்பட்டு வருகின்றன. [ஒ-9]

## உறுப்பினர்களின் ஒற்றுமையால் இன்னல்களின் போது உதவினோம்

### நலன்புரிச் சங்கக் கூட்டத்தில் உரை

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 12
பத்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் காட்டிய ஒற்றுமை காரணமாக அங்கத்தவர்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டபோது தேவையான உதவிகளைச் செய்யக் கூடியதாக இருந்தது.

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் பத்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தலைவர் த. நவரத்தினராசா உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு குடும்பத்தில் கூட பிள்ளைகள் யாவரும் கருத்தொற்றுமையுடையவர்களாகவோ ஒரே நோக்கம் ஒரே எண்ணம் கொண்டவர்களாகவோ இருப்பது அரிது

ஆனால் இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் ஒற்றுமையாகவும் ஒரே நோக்கம், ஒரே எண்ணம் உடையவராகவும் இருக்கிறார்கள் என்பதை அறியும்போது பெருமிதமடைகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

கூட்டத்தில் அ. க. ஏனாதிநாதன், க. சந்திரமௌளீசன், திருமதி சௌ. சோதிநாதன் உட்பட பலர் உரையாற்றினர். [ச-117]

## திறந்த வெளி கற்கை நிலையம் திறக்கப்பட்டது

திறந்த வெளி பல்கலைக் கழகத்தின் கற்கை நிலையமொன்று மட்டக்களப்பு பார் வீதியில் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கே. டி. அருள் பிரசாத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா, திறந்தவெளி பல்கலைக்கழக அம்பாறை இணைப்பாளர் திரு. கே. தர்மலிங்கம், சசெக்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் டி ஆர். எம். வோல்டன், அரச அதிபர் திரு. கே. மகேஸ்வரேத்தினம் ஆகியோரும் இத்திறப்பு விழாவில் பங்குபற்றினர். (ச-21

## நியமனக் கடிதம் சிங்களத்தில்

பச்சிலைப்பள்ளி பகுதியில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாக கடமையாற்றிய ஏழு பேரும் கிராம சேவை அலுவலர்களாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் நியமனக் கடிதம் தனிச்சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளன. (ச- 117)

### மக்கள் முகம்

## சுருவில் றே. க. நிர்வாகிகள்

சுருவில் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய அபிவிருத்திச் சங்கப் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

தலைவராகப் பாடசாலை அதிபர் திரு. பொ. சோமசுந்தரமும், செயலாளராக ஜோசப் ராஜசேகரமும், பொருளாளராக [illegible] பிரான்சிஸ்சும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [ச - 19]

# அந்தியேட்டி நினைவஞ்சலி



உதயம்: 15-11-1953
மறைவு: 15-03-1989

## கார்த்திகேசு பிரேம்குமார்

அமரத்துவமடைந்த எங்கள் அன்புத் தெய்வமான கார்த்திகேசு பிரேம்குமார் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். யாழ்ப்பாணம், பொது போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த எங்கள் குடும்பத்தலைவரின் இறுதி நாட்களில் சகல விதங்களிலும் உதவிய வைத்திய நிபுணர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம், மேலும், அன்னாரின் இறுதிக் கிரியைகளிற் கலந்துகொண்டவர்களுக்கும், தந்திகள், தபால்கள் மூலம் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று புதன்கிழமை நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்ளும் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றி!

அன்பு மனைவி, ஆசைமகன்.
உறவினர்கள்.

நயினாதீவு-02
12-04-1989.

[10320]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## கந்தையா பரமலிங்கம்

தோற்றம்:- 17- 05- 1932
மறைவு:- 13- 03- 1989

உள்ளக் கபடமின்றி உழைத்த உத்தமனாய்
ஊரார்க்கும் பணி செய்து உயர்ந்த தலைமகனாய்
எத்திக் கற்றோர்க்கும் என்று மோர் நற்கதியாய்
எங்கெண்ணமெல்லாம் நிலைத்தவரே!

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பல விதத்திலும் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

[illegible]

(122)

யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்க

## வருடாந்தப் பொதுக்கூட்டம் 1989 / 1990

மேற்படி சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16-04-1989 ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணிக்கு வழமையான நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகி மாலை நாலு மணி வரை நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். ஆயுட்கால அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனைய அங்கத்தவர்கள் உறுப்புரிமைப் பணமாகப் பத்து (10/-) ரூபாவையும் மதிய போசனப் பணமாகப் பத்து (10/-) ரூபாவையும் சங்கப் பொருளாளர் திரு. சி. யோகநாதர் அவர்களிடம் செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். நாட்டு நிலைமை காரணமாகத் தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.

திரு நா. தவநாதன்,
திருமதி பா. வாமதேவன்,
இணைச்செயலர்.

திரு. க. நாகராசா,
தலைவர்:

[10525]

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் க. பொன்னையா

(இளைப்பாறிய S.M.L.T. பெரிய ஆஸ்பத்திரி, கொழும்பு)

தோற்றம்:- 11 - 12 - 1919
மறைவு:- 23 04 - 1988
திதி: 12-04-1989

எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய கிழவி தோட்ட விநாயகரை வேண்டுகின்றோம்.

மனைவி மற்றும்
குடும்பத்தினர்.

'திருப்பதி'
கிழவிதோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(108

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு: 18 — 01 — 1911



இறப்பு: 11 — 03 — 1989

## திருமதி அனலக்ஷ்மி நவரத்தினம்

"கர்த்தரின் பாதத்தில் பக்தியுடன் வாழும்
சுத்தர்களுடன் ஆனந்தக் கீதம் பாடி
நித்தியம் வாழ அன்புத் தாயே
இறைவனை இறைஞ்சுகிறோம்"

எமது அன்புத்தாயார் அனலக்ஷ்மி நவரத்தினம் அவர்களின் மரணச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரடியாக தந்தி, தபால் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் பல்வேறு உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/2197)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல்;

**பொருள்:**

அறச் செயல்களும் அவற்றுக்கு வேண்டிய பொருள் சம்பாதிக்கும் முயற்சியும் இவற்றை ஒட்டி வரும் மற்ற நன்மைகளும் பெண்ணேவல் செய்கிறவர்களிடம் இருக்க மாட்டா.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
12 - 04 - 1989 த. பெ. இல: 23

# எல்லோருக்கும் சேர்த்து ஒரே புதைகுழியா?

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் திருத்தப்படவுள்ளது. உத்தேச திருத்தங்களின் நகல், அரசியல் கட்சிகளின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது செய்தி.

அவசரகாலச் சட்டத்தை அடிக்கடி கொண்டு வருவதையோ, அதனை ஒரே தொடர்ச்சியாக நீண்ட காலத்துக்கு—வருடக்கணக்காக— அமுல் செய்வதையோ தவிர்ப்பதற்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மேலும் பலமூட்டுவதே — வலுவூட்டுவதே திருத்தங்கள் செய்வதன் பின்னணி.

கடந்த அரசாங்கம், தனது ஆட்சிக் காலத்தில் பெரும்பகுதியை அவசரகாலச் சட்டம் என்ற இரும்புப் போர்வையால் பாதுகாத்துக் கொண்டது. அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப் படுத்தாமல் ஆட்சியை நடத்த முடியாது என்ற அளவுக்கு பலவீனமுற்று இருந்தது. ஆட்சி ஆள் எண்ணிக்கை உயர்ந்திருந்தாலும், மூன்றில் இரண்டு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இருந்த போதிலும், ஆளணி, படைபலம், எடுபிடி என்று எண்ணற்ற அரசாட்சி வசதிகள் இருந்த போதிலும், பாதுகாப்புச் செலவுக்கென்று பல்லாயிரம் கோடி ரூபா பணத்தைச் செலவிட்ட போதிலும், அவசரகாலச் சட்டம் என்ற தடுப்புக் கேடயத்தைக் கையில் பிடிக்காமல், ஒரு நாள் பொழுதுதானும் ஆட்சிக் கட்டிலில் இருக்க முடியவில்லை அந்த அரசுக்கு.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சி நடத்தியமை அரசுக்கு வெளி உலகில் இழுக்கைத் தேடிக்கொடுத்தது. அரைக்கரைவாசி இராணுவ ஆட்சி நடத்தும் அரசு என்ற பெயரையும் பெற்றுக் கொடுத்தது அதே அவப் பெயரைத் தொடர்ந்து தானும் சம்பாதித்துக் கொள்ளக்கூடாது என்று பிரேமதாச அரசு நினைக்கிறது. அதில் தப்பில்லை; நியாயமான ஆசையுந்தான்!

ஆனால் அந்த ஆசையை நிறைவேற்ற அரசு கைக்கொள்ளும் வழிமுறை, செல்ல நினைக்கும் பாதை பயங்கரமானது. அந்தப் பாதை, அரசுக்கு ஆட்சிப் பாதுகாப்பு வழங்கக் கூடும்; ஆனால் மக்களின் வாழ்க்கையைப் பயங்கரமாக்கிவிடும்.

பயங்கரவாதச் சட்டம் இந்த நாட்டின் மிகமிகக் கொடிய மிருகத்தனமான சட்டம் எனலாம், பயங்கரவாதத்தைத் தடுப்பது என்ற பெயரில் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு வேண்டாதவர்களை, எதிரானவர்களை, எதிரான கருத்துக்களைச் சொல்பவர்களை, கேள்வி-நியாயமின்றி, நீதி-விசாரணை இன்றி முடித்துக் கட்டிவிட உதவுவது அந்தச் சட்டம்.

பயங்கரவாதச் சட்டத்தின் கொடும் பற்களைப் பற்றியும், அவை பயங்கரவாதிகள் என்ற எழுந்தமானச் சந்தேக முத்திரை குத்தி, சாதாரண மக்களை எப்படிப் பிய்த்தும் பிறாண்டுகின்றன என்பதையும் இப்பத்தியில் பலதடவைகள் எடுத்தியம்பி உள்ளோம். மக்களின் அடிப்படை உரிமைகளை அக்கூரிய பற்கள் எப்படிப் பறித்து எடுத்து கடித்துக் குதறி விளையாடுகின்றன என்பதையும் விளக்கி உள்ளோம்.

அந்தக் கூரிய கொடிய பற்களில் அகப்பட்டு எத்தனை ஆயிரம் தமிழர்கள் அழித்தொழிக்கப்பட்டார்கள் என்பது மறைக்க முடியாத வரலாறு.

இந்தக் கொடிய சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று உள்நாட்டில் உள்ள மனித உரிமை விரும்பிகள் மட்டுமன்றி சர்வதேச நிறுவனங்களே கேட்டன; கேட்கின்றன; கண்டித்தன; கண்டிக்கின்றன.

அவ்வாறு இருக்கும் போது, அந்தக் கொடும்சட்டத்துக்கு மேலும் வலுவும், பலமும் ஊட்ட திரு. பிரேமதாசவும், அவரின் பிரதம சாரதி திரு. ரஞ்சன் விஜேரத்தினவும் முனைவது பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதைதான். மக்களுக்கு எதிரான நாடகத்தில் திரு. ஜே. ஆரும், திரு. லலித்தும் வகித்த வேடங்களை இவர்கள் இருவரும் போட்டிருக்கிறார்கள் என்ற வித்தியாசம்தான்.

புதிய சட்டத்திருத்தங்களில் ஒன்று சந்தேக நபர்களை 18 மாதங்களுக்குக் கூடுதலாகவும் தடுப்புக்காவலில் வைத்திருக்கப் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட வகை செய்கிறது, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தடுப்புக் காவல் உத்தரவை நீடிக்கவும் அந்த அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்படும்.

இது ஒன்றே, இந்த நாட்டின் பிரசை ஒருவனை நீதி விசாரணை இன்றிச் சிறைவைத்து மனநோயாளி ஆக்கிவிடப் போதுமானது. ஏனையவை குறித்துப்பேசிப் பயன் என்ன?

இப்பொழுதே மரண வேதனையும், நரக வேதனையும் தரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மேலும் கொடும்திருத்தங்களைச் சேர்ப்பது என்பது இந்த நாட்டில் மனித அடிப்படை உரிமைகளுக்குப் புதைகுழி வெட்டுவதற்கு ஒப்பாகும். சனநாயகத்துக்குப் புதைகுழி வெட்டுவதற்கு நிகராகும். நாட்டு மக்கள் எல்லோருக்கும் சேர்த்து ஒரே பெரிய புதைகுழியை வெட்டுவதற்குச் சமனாகும்.

புத்தரின் தத்துவங்களையும், போதனைகளையும் மேடைகளில் கவர்ச்சிகரமாக முழக்கிவரும் —

சாதாரண மனிதனாக இருந்து ஜனாதிபதியாக உயர்ந்திருக்கும்— திரு. பிரேமதாச பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கொடுமைகளைச் சற்று ஆறுதலாக, அவசரப்படாது, ஆற அமர இருந்து ஒன்றுக்குப் பல தடவைகள் இரைமீட்டுச் சிந்திப்பாராக.

# ஜெயலலிதா மீது கிரிமினல் வழக்குப் போட வேண்டும்

## தி.மு.க. மந்திரி கூறுகிறார்

சென்னை, ஏப்ரல் 11

ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டுள்ள மனநோயைத் தீர்க்க அவர்மீது கிரிமினல் வழக்குப் போட வேண்டும்என்று தமிழ்நாடு உணவு அமைச்சர் ஆற்காடுவீராசாமி தெரிவித்தார்.

செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் மேலும் சொன்னதாவது;

எம். ஜி. ஆர். இறந்ததும் ஜானகி அம்மையார் மோரில் விஷம் கலந்து அவரைக் கொன்று விட்டதாக ஜெயலலிதா கூறினார்.

இப்போது முதலமைச்சர் கருணாநிதியைப் பற்றி ஏதேதோ கூறுகிறார்.

இதை எல்லாம் பார்க்கும் போது ஜெயலலிதா மனநோயாளி போல நடந்து கொள்வது தெரிகிறது.

கலைஞரைப் பற்றி அப்பட்டமான உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டைக்கூறும் ஜெயலலிதா மீது கிரிமினல் வழக்குப் போடவேண்டும். அப்போதுதான் அவருடைய மனநோய் தீரும் —

இப்படி அமைச்சர் வீராசாமி சொன்னார். (எ)

## ஆப்கன் நிலைமை

காபூல், ஏப்ரல் 11

ஜலலபாத் மீதான ஆப்கன் கெரில்லாக்களின் மும்முனைத் தாக்குதலை காபூல் அரசுப் படைகள் முறியடித்து விட்டன என்று சொல்லப்பட்டன.

இதனிடையில் ஐ.நா. பொதுச்செயலாளரை நேரில் சந்தித்து பாகிஸ்தானின் தலையீடு பற்றி முறையிட ஆப்கன் வெளியுறவு அமைச்சர் அப்துல் வாக்கில் அமெரிக்கா சென்றார். [எ]

# ✱ நீண்டதூர ஏவுகணையில் புதிய முயற்சி

# இம்மாதமுடிவில் 'அக்னி' பரிசோதனை இந்திய அரசு நடத்தப்போகின்றது

புதுடில்லி, ஏப்ரல் 11

இந்தியாவின் நீண்ட தூர ஏவுகணை 'அக்னி' இம்மாதம் 3-ஆம் வாரம் பரீட்சித்துப் பார்க்கப்படவுள்ளது.

ஒரிஸ்ஸா மாநிலத்தில் சண்டிப்பூர் பரீட்சார்த்த வலயத்தில் 'அக்னி' பரீட்சை இடம்பெறும்.

இந்தியா ஏற்கனவே குறுகிய தூர ஏவுகணைகளான பிருத்வி, திரிசூல் ஆகியவற்றை வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்த்தது தெரிந்ததே.

'அக்னி' ஏவுகணைப் பரீட்சையை இந்தியா கடந்த ஓராண்டு காலமாகத் தாமதித்து வந்தது.

ஆனால் பாகிஸ்தான் அண்மைக் காலத்தில் ஏவுகணைப் பரீட்சையை நடத்தியதைத் தொடர்ந்துதான் 'அக்னி' ஏவுகணைப் பரிசோதனையை விரைவில் நடத்த இந்தியா முடிவு செய்தது.

### கிராம மக்கள் வெளியேற்றம்

'அக்னி' பரீட்சைக்காக சண்டிப்பூர் பரீட்சார்த்த வலயத்தைச் சுற்றியுள்ள 11 கிராமங்களைச் சேர்ந்த மக்களை தற்காலிகமாக வெளியேற்ற அரசு முடிவு செய்துள்ளது.

மக்களுக்கு நஷ்டஈடும் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது:

இந்தியாவின் 'அக்னி' ஏவுகணைப் பரீட்சை அயல் நாடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக அயல் நாடுகளில் பத்திரிகைகள் கண்டனங்களை எழுப்பி வருகின்றன. (எ

# அமெரிக்காவின் வன்செயல் நகரம் வாஷிங்டன்

வாஷிங்டன், ஏப்ரல் 11

அமெரிக்காவின் வன்செயல் நகரம் என்ற பெயரை 'வாஷிங்டன்' பெற்று வருகிறது.

இதைத் தடுப்பதற்கான இயக்கம் ஒன்றை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் ஆரம்பித்துள்ளார்.

போதைவஸ்து பாவனையாளர்கள் எண்ணிக்கை வாஷிங்டனில் அதிகரித்து உள்ளது. அவர்கள் வீதிவன்செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து இதுவரை வாஷிங்டனில் போதை சம்பந்தப்பட்ட வன்செயல்களில் 180 பேர் மரணமானார்கள்.

போதை வன்செயல்களைத் தடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்காக 7 கோடி டாலரை நிதி அதிபர் ஜோர்ஜ்புஷ் ஒதுக்கியிருக்கிறார். (எ)

## மாஸ்கோ மறுப்பு

லண்டன், ஏப்ரல் 11

நவீன குண்டு வீச்சு விமானங்களை லிபியாவிற்கு விற்றதாகக் கூறப்படும் செய்தியை சோவியத் யூனியன் நேற்று மறுத்தது. (எ)

# எதிர்க்கட்சி மாநில அரசுகளை கலைப்பது பற்றி ராஜீவ் கருத்து

கல்கத்தா, ஏப்ரல் 11

காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளைக் கலைக்கும் எண்ணமே மத்திய அரசுக்குக் கிடையாது.

பிரதமர் ராஜீவ் காந்தி இத்தகவலை வெளியிட்டார். அவர் மேலும் சொன்னதாவது;

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மாநிலங்களுக்கு தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதிப்படுத்துவதும்,

சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மாநிலங்களில் முறையாக நடைபெறுகிறதா என்பதை பார்த்துக் கொள்வதும் மத்திய அரசின் பொறுப்பாகும்.

இப்படி பிரதமர் காந்தி தெரிவித்தார்.

கல்கத்தா விமான நிலையத்தில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் பிரதமர் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

அஸாம், தமிழ்நாடு ஆகிய மாநில அரசுகளைக் கலைக்க அரசு சதி செய்வதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுக்களையும் அவர் மறுத்தார். [எ]

# வாஷிங்டனில் நடந்த பெண்கள் பேரணி

வாஷிங்டன் நகரில் நேற்று சுமார் 3 லட்சம் பெண்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

பெண்கள் கருச்சிதைவு செய்துகொள்ளுவதை கட்டுப் படுத்தும் சட்டமூலம் ஒன்றை அமெரிக்க அரசு கொண்டு வந்திருக்கிறது. அதை எதிர்த்தே இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

கருச்சிதைவு கிளினிக்குகளை நடத்த வழங்கப்படும் உதவிப் பணத்தொகையைக் குறைக்கவும் இச்சட்டமூலம் வழி வகுக்கிறது. (எ)

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# சைவத்துக்கும் தமிழுக்கும் தன்னை அர்ப்பணித்தவர் நல்லைக் குருமணி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வண்ணம் தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த பெருமை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன ஸ்தாபகரான நல்லைக்குருமணி அவர்களையே சாரும். தமிழ்கூறும் நல்லுலகம் அவரது அளப்பரிய பணியை இன்று நினைவு கூருகின்றது. இன்று அவரது 8ஆவது குருபூஜை.

நல்லூரிலே இன்று சைவ மணங்கமழ்கின்றதென்றால் அது ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளால்தான் எனில் மிகையாகாது. தனது தொண்டையினாலேயே தொண்டு செய்து சைவம் வளர்த்தவர் அவர். அவர் ஈழமணித் திருநாட்டில் மட்டுமன்றி பாரத நாட்டிலும் சைவத்துக்கு அருந்தொண்டாற்றி அரும்பணி செய்தார் அவர்.

அவருடைய தோற்றமே அருள் தோற்றம். நெற்றியில் துலங்கும் திரிபுண்டரத் திருநீறு. தலையிலும் கழுத்திலும் உருத்திராக்ஷம். அமைதியான அருட்கண் பார்வை. எவரையும் எளிதில் வசப்படுத்தும் வசீகரத் தோற்றம். பார்த்த மாத்திரத்திலேயே பகைவரும் பணிந்து விடுவர்.

ஆலயங்கள் தோறும் அவரது குரல் கணீரென்று ஒலிக்கும். அவரது கதை கேட்கவென்றே அன்பர்கள் கூட்டம் அணி திரண்டுவிடும். அவர் கதை செய்யும் விதமே தனி. படித்தவர்களும் பாமரர்களும் புரியும் விதத்தில் பக்குவமாக எடுத்துக் கூறும் தனித்திறமை அவருக்கேயுரி

## இராசையா ஸ்ரீதரன்

மலேசியா, கோலாலம்பூர், சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும் சைவத் தமிழ்ப் பிரசங்கம் செய்து சமயசேவை ஆற்றிய அருமையை என்னென்பது!

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தி நாளுந் துதிக்க வேண்டியது நம் தலையாய கடமை யென்று வாழ்ந்து காட்டியவர் ஸ்வாமிகள். நல்லூரிலே ஓர் ஆதீனத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்ற நோக்கோடு முழுமூச்சாகச் செயற்பட்டவர் அவர். எத்தனையோ எதிர்ப்புகள் மத்தியில் நல்லை ஆதீனத்தை ஸ்தாபித்தது.

சம்பூர்ண இராமாயண விரிவுரை, மகாபாரத விரிவுரை, திருவிளையாடற்புராண விரிவுரை, பெரியபுராண விரிவுரை, கந்தபுராண விரிவுரை முதலானவை அவருக்கு வாய்ப்பாடம். கடல் மடை திறந்தாற்போல் சொல்மழை பொழிந்து கதை செய்வார். நேரம் போவது தெரியாமல் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அவருடைய இடத்தை நிரப்புவதற்கு இனி எவருமில்லை.

நல்லை நகராறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழங்கே சுருதியெங்கே எல்லவரும் ஏத்து புராணாகமங்களெங்கே பிரசங்கமெங்கே என்று சி. வை. தாமோதரம் பிள்ளை கூறியது போல இன்றைய காலகட்டத்தில்—

'நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே-பிரசங்கமெங்கே' என்று சொல்வது சாலப் பொருந்தும்.

'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று வாழ்ந்த நல்லைக்குருமணி அவர்கள் இன்று நம்மிடையே இல்லாதது நாம் செய்த பாவம் என்றே சொல்லவேண்டும்.

நல்லை ஆதீனம் சமயபாட வகுப்பு, பண்ணிசை — சங்கீத வகுப்பு, பண்டித வகுப்பு என்றின்னோரன்ன வகைகளிலே மாணவ உலகுக்கும் சேவை புரிகிறது. பஜனை, கூட்டு வழிபாடு, மனனப் போட்டிகள், கருத்தரங்குகள், புராணபடனம் போன்றவற்றாலும் அது தனது கடனைச் செவ்வனே செய்து வருகிறது. இத்தனைக்கும் மூலவேர் நமது நல்லைக் குருமணியே!

ஆகவே அவர் விட்டுச் சென்ற பணியை நாம் அவர் வழியிலேயே நின்று தொடர்ந்து சேவையாற்றி மகிழ்வோம். அதுவே நாம் மறைந்த மாமணிக்குச் செய்யும் கைம்மாறாகும்.

**நல்லைக் கயிலாய பிள்ளையாரே!**

கயிலையங் கிரியில் வாழும்
கண்ணுதற் பெருமா னாரின்
செயிரறு மூர்த்த மாகிச்
சேந்தனுக் கண்ண னாகி
நயிட்டிகம் மிக்கோர் வாழும்
நன்னெறி தவழும் நல்லைக்
கயிலாய பிள்ளை யாரே!
கடைக் கணித் தருள் செய் வாயே!

-கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

(சேந்தன் - முருகன்
செயிக - குற்றம்
நயிட்டிகம் - நியம நிட்டை)

(இன்று நல்லூர்க் கைலாச பிள்ளையார்
2ஆம் திருவிழா)

## நல்லை ஆதீன குருபூஜை விழா

யாழ்ப்பாணம் ஏப்ரல 12

நல்லைக் குருமணியின் 8ஆவது ஆண்டு குருபூஜை விழா இன்று நல்லை ஆதீனத்தில் நடைபெறுகின்றது.

பகல் 11 மணிக்கு விசேஷ பூஜை, தீபாராதனை நடைபெற்று வேத பாராயணம் தேவார பாராயணம் அன்னதானம் ஆகியன நிகழும்.

மாலை நிகழ்ச்சியாக விசேஷ சொற்பொழிவுகளும் சங்கீத பூஷணம் திரு. நவரத்தினத்தின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும். (அ)

## நாவலம்பதி கந்தசுவாமி கோயிலில்

அச்சுவேலி, ஏப்ரல். 12

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக்கந்தசாமிகோவில் மகா சங்காபிஷேகம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

புது வருடப் பிறப்பன்று நடைபெறும் சங்காபிஷேகத்தை அடுத்து விஷேட உற்சவமும் நடைபெறும். [ச-11]

# ஆரம்ப ஆசிரியர்களாக நியமனம் பெறுவோர்

**(நேற்றைய தொடர்ச்சி)**

யாழ்ப்பாணம் ஏப்ரல்,12

ஆரம்ப ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டு சேவை முன் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய 107 பேருக்குநியமனங்கள்வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் இம்மாதம் 24-ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகும் போது தமது பதவிகளைப்பொறுப்பேற்கவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

நியமனம் பெறுவோரில் 25 பேரின் விவரங்கள் 11-4 89 உதயனில் வெளிவந்தன.

மிகுதிப் பேரின் விவரங்கள் வருமாறு:

26. செல்வி வீ. உமாநிதி, மந்துவில் மேற்கு, கொடிகாமம். 27. செல்வி கே.வசந்தி, சுன்னாகம் தெற்கு. 28. செல்வி எல்.சசிகலாதேவி, கொக்குவில் மேற்கு. 29. செல்வி எம். கலாவதி, நயினாதீவு. 30. திரு. எஸ். சண்முகதாஸ், யாழ்ப்பாணம். 31. செல்வி பி. ரஜனி, நயினாதீவு.

32. திரு. கே. ஜி. செல்வராசா, ஆனைக்கோட்டை. 33. செல்வி ஆர். மகாலட்சுமி, வேலணை மேற்கு. 34. செல்வி ஆர். வனிதா, பருத்தித்துறை. 35. செல்வி கே. செல்வமலர், காரைநகர். 36. திரு. எஸ். கோபாலகிருஷ்ணன், கரணவாய் தெற்கு. 37. செல்வி எஸ். கருணாம்பிகை, புங்குடுதீவு.

38. செல்வி கே. சிவலோசினி, கொக்குவில். 39. திரு. கே. முருகானந்ததாஸ், புலோலி தெற்கு. 40. திரு. எஸ். சுதாகரன், நல்லூர்.

41. திருமதி எஸ். வத்சலா, கந்தர்மடம். 42. செல்வி எஸ். யசோதா, வேலணை மேற்கு. 43. திரு. ஆர். சிவசேகர், கரவெட்டி வடக்கு. 44. கே. புஷ்பமலர், கோப்பாய்.

45. செல்வி எஸ் சிவநந்தினி, துன்னாலை தெற்கு. 46. செல்வி எஸ். செல்வரமணி, யாழ்ப்பாணம். 47. திருமதி எஸ். கொஸ்தா, சரவணை. 48. செல்வி வி. ஜெயபவானி, அல்வாய் மேற்கு. 49. திருமதி டபிள்யு. நந்தினி, அளவெட்டி தெற்கு. 50. செல்வி என். ஜெயராணி, யாழ்ப்பாணம்.

51. செல்வி எஸ். யசோதா, நல்லூர். 52 திரு. என். திருக்குமரன், சுளிபுரம். 53. திரு எஸ். கோபிநாத். பருத்தித்துறை. 54. செல்வி கே. காயத்திரி. கரவெட்டி. 55. செல்வி எம். சாந்தரூபி, புங்குடுதீவு, 56 திரு. எஸ். ஜெயந்தகுமார் ஆனைக்கோட்டை. 57. செல்வி என். விஜயநந்தினி, அச்சுவேலி. 58. செல்வி எம். துளசி, நீர்வேலி. 59. திருமதி ரி. மனோகரி, வேலணை. 60. திரு. என். சபாரத்தினசிங்கி, வட்டுக்கோட்டை.

61. சோமஸ்கந்தமூர்த்தி, இணுவில். 62, கெ. கலாதேவி. மானிப்பாய். 63. ரி. திருஞானரஞ்சனி, ஆனைக்கோட்டை. 64. ஆர். தம்பிராசா, கோப்பாய். 65. வீ. வசந்தி, பருத்தித்துறை. 66. என். சிவபாக்கியம், அச்சுவேலி. 67. வீ. நிரஞ்சி, கரவெட்டி. 68. எஸ். பாமா, வல்வெட்டிதுறை. 69. பி. தவரஞ்சினி, சுன்னாகம்.

70. ரி. சகுந்தலாதேவி, புலோலி. 71. எஸ். ஞாமலர், அச்சுவேலி. 72. எஸ். கிருபாகரன், வேலணை. 73. என். ஆதிரை, கரவெட்டி. 74. வீ. சிவமலர், அச்சுவேலி. 75. ரி. சர்வேஸ்வரன், கோப்பாய் சந்தி. 76. எஸ். குகன், தும்பளை. 77. கெ செல்வபாக்கியம், இடைக்காடு.

78. ஜெ. சத்தியதாசன்,

( 8ஆம் பக்கம் பார்க்க)




எவர் தூய எண்ணத்தோடும், நம்பிக்கையோடும் ரமழான் மாத காலங்களில் பரிசுத்த நோன்பை வைக்கின்றாரோ அவர் முன்னர் செய்த பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. இன்னும் எவர் தூய்மையான எண்ணத்தோடு புனித ரமழான் இரவு காலங்களில் நின்று வணங்குகின்றாரோ அவரும் முன்னர் செய்த பாவங்களை அல்லாஹ் மன்னித்தருள் புரிகிறான்.

**ஸஹர் முடிவு 4-29**
**நோன்பு திறக்கும்நேரம் 6-20**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

File 10


அன்புடன் அழைக்கின்றது

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெகட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்



# உதயன்

12 - 04 - 1989 புதன்கிழமை



எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## வீதி வசதிகளை அபிவிருத்தி செய்ய

# ஆறுயிரம் பேர் கொண்ட பட்டாளம்

### பெருந்தெருக்கள் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஏப்ரல் 12

நாட்டில் வீதி வசதிகளை அபிவிருத்தி செய்ய 6 ஆயிரம் பேரைக் கொண்ட வீதி பராமரிப்புப் பட்டாளம் ஒன்றைத் திரட்ட பெருந்தெருக்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது

தற்போது உணவு முத்திரை பெறுபவர்களையே அமைச்சு இந்தப் பட்டாளத்தில் சேர்த்துக்கொள்ளும்.

சேர்த்துக் கொள்ளப்படும் ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கப்படும். அவர்கள் ஒவ்வொருவருக்கும் வீதிகளில் 2 அல்லது 3 மைல் தூரப் பகுதி பிரித்துக் கொடுக்கப்படும்

அந்தப் பகுதியில் கான்களை வெட்டி, இரு மருங்கிலும் காடுகளைச் சுத்தம் செய்து வீதியை முறையாகப் பராமரிப்பது அவர்களின் கடமையாகும்.

இப்பணிக்கு அரசியல் வேறுபாடின்றி ஆட்கள் திரட்டப்படும் என்று பெருந்தெருக்கள் துணை அமைச்சர் ஆனந்த குலரத்ன சொன்னார்.

தமக்கு ஒதுக்கிக் கொடுக்கப்படும் வீதியைப்பராமரிப்பதில் மேற்படி ஊழியர்கள் தமது குடும்பத்தினரின் உதவியையும் பெறலாம்.

குறிப்பிட்ட பணி முடிவடைந்த பின்னர் பிரதேச முகாமையாளர் ஒருவரின் சிபாரிசை அடுத்து மாதாந்தம் ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் ஏ, பி, சி மற்றும் டி தரங்களிலான 12 ஆயிரத்து 500 மைல் வீதிகளைப்பராமரிக்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதேவேளை இந்த வீதிகளுக்குத் தார் போடுவதற்கு 26 கோடி ரூபா ஒதுக்குவது என்றும் அமைச்சு தீர்மானித்து உள்ளது. (ஒ-எ)

## கழகங்களுக்கிடையே நாளை கிரிக்கெட் போட்டி ஆரம்பம்

— விளையாட்டுத்துறைச் செய்தியாளர்: கே. இளங்கோ —

யாழ்ப்பாணம். ஏப்ரல் 12

யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் பெனின் சுலா குறூப் ஸ்தாபனத்தின் ஆதரவுடன் பெனின் சுலா வெற்றிக் கேடயத்திற்காக நடத்தப்படும் 30 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட நொக் அவுட் முறையிலான கிரிக்கெட் போட்டி நாளைக் காலை ஆரம்பமாகின்றது.

இப்போட்டிகளில் யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும் 12 கழக அணிகள் பங்குபற்றுகின்றன. ஆட்டங்கள் யாவும் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இன்று காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது ஆட்டத்தில் சென்றலைற்ஸ் சொக்வட் அணியை எதிர்த்து ஷப்ரு விளையாட்டுக் கழக அணியும்—

மாலையில் நடைபெறுகின்ற போட்டியில் சென்றலைட்ஸ் நீலஅணியை எதிர்த்து மல்லாசம் ஜெட் ஸ்டார் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (உ-6)

## சுன்னாகம் இலங்கைவங்கியில் சேமிப்புசான்றிதழ் வைபவம்

யாழ்ப்பாணம், ஏப் 12

சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையில் நேற்று சேமிபபுச் சான்றிதழ் அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது.

வைபவத்துக்கு சுன்னாகம் வங்கிக்கிளை முகாமையாளர் திரு. மூ. பாலசிங்கம் தலைமை வகித்து உரைநிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினராக சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சுன்னாகம் பங்குத் தந்தை வணபிதா அ. ந. யோகராசா, சட்டத்தரணி திரு. எம். சபாநாதன், இணுவில் சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள், சுன்னாகம் ஸ்கந்தவரோதய அதிபர் திரு. பொ. நாகரெட்ணம், தெல்லிப்பழை தொழில் அதிபர் ச. ஆறுமுகநாதன், தமிழ்க்கந்தையா வித்தியாலய அதிபர் தா. தற்பரானந்தன், எம். செல்வராஜ். திரு. இளையதம்பி ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்ட முகாமையாளர் க. கணேசமூர்த்தி, வடபிரந்திய செயற்பாட்டு முகாமையாளர் மு. கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உதவி முகாமையாளர் திரு. வி. விவேகனந்த சர்மா நன்றியுரை நிகழ்த்தினார். (இ)

## நுவரெலியாவிலும் கடும் வரட்சி நிலை!

நுவரெலியா, ஏப்ரல் 12

நுவரெலியாவிலும் அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக மழை பெய்யாததனால் கடும் வரட்சி ஏற்பட்டிருக்கிறது.

நீர் நிலைகள் வரண்டு விட்டன. மக்கள் குடிநீருக்காகவும், குளிக்கவும் பல மைல் தூரம் அலையவேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடும் வரட்சியினால் தேயிலைச் செடிகள் கருகி பட்டுவிடும் அபாயமும் ஏற்பட்டிருக்கிறது.

நீர் மின்சார உற்பத்திக்கு பயன்படும் மவுசாகலை, காசல்ரீ, மஸ்கெலியா நீர் தேக்கங்களில் முற்றாக நீர் வற்றிவிடும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

முற்றாக நீர் வற்றிவிடும் சமயத்தில் மின் உற்பத்தி பாதிக்கப்படும் அபாயமும் ஏற்பட்டிருக்கிறது. (உ-58)


உங்கள் தேவை!
எங்கள் சேவை!!
● தரமான
● தெளிவான
● சிக்கனமான
தமிழ், ஆங்கில
தட்டச்சு - ரோணியோ
வேலைகளுக்கு
★ ★ ★
ஷப்ரு (சேவைப் பகுதி)
இல: 19, 2 ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(/1946)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 12 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 1000 சிவலிங்கம் கொண்ட தொன்மையான திருத்தலம்

### தமிழ் நாட்டில் கண்டுபிடிப்பு

தஞ்சாவூர், ஏப்ரல் 12

பல்லவ மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட — ஆயிரம் சிவலிங்கங்கள் கொண்ட — 'ஆயிரத்தலை' என்ற வழிபாட்டுத் திருத்தலம் தமிழ் நாட்டில் புதைபொருளாராய்ச்சி நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அந்த இடத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது சுமார் 350சிவலிங்கத் திருவுருவங்கள் எடுக்கப்பட்டன.

தஞ்சாவூரில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வீரசிங்கம் பேட்டை என்னுமிடத்தில் ஆயிரம் சிவலிங்க வழிபாட்டுத்தலம் கண்டுபிடிக்கப்பட்டதாக தமிழ்நாடு புதைபொருளாராய்ச்சித் திணைக்கள முன்னாள் இயக்குநர் டாக்டர் ஆர். நாகசாமி தெரிவித்தார்.

டாக்டர் நாகசாமி இது பற்றிச் சொன்னதாவது:—

9 ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் காஞ்சிபுரம் பல்லவ மன்னன் நிரிபாத்துங்க பல்லவனால் இந்த ஆலயம் கட்டப்பட்டது.

வீரசிங்கம் பேட்டை அருகில் உள்ள சண்டியூர் பிரம்மா ஆலயமும் பல்லவர்களாலேயே கட்டப்பட்டது.

இப்பகுதியில் அகழ்வாராய்ச்சியின் போது எடுக்கப்பட்ட புராதன சின்னங்கள் சோழர் காலப்பேரரசு வரும் முன்னர் பல்லவராட்சி இடம்பெற்றது என்பதை நிரூபிக்கின்றது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்ட 300 க்கு அதிகமான சிவலிங்கங்களும் உயர்தர கிரனயிட் Granite கற்களில் செய்யப்பட்டவை. துர்க்கை, சிவன், கணபதி, ருத்ரன் ஆகிய விக்ரகங்களும் இவற்றில் அடங்குகின்றன. இவை இரண்டு அடி உயரமானவை.

—இப்படி டாக்டர் நாகசாமி தெரிவித்தார். (உ-எ)

## இந்தியாவில் முதன்முதலாக பெண் கிறிஸ்தவ பாதிரியார்

திருவனந்தபுரம், ஏப் 12

இந்தியாவில் முதன்முறையாக பெண் ஒருவர் கிறிஸ்தவ பாதிரியாராக கேரள மாநிலத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திருச்சியைச் சேர்ந்த திருமதி மார்த்தா டேவிட் என்பவரே பெண் பாதிரியார் ஆவார்.

''பெண்கள் இப்பணியை ஏற்கக்கூடாது என்று கிறிஸ்தவ திருமறை நூலில் எங்கும் கூறப்படவில்லை'' என தென் இந்தியத் திருச்சபையைச் சேர்ந்த ஆயர் யேசுதாஸன் கூறியிருக்கிறார். (உ-ஒ-எ)

## அங்குரார்ப்பண விழா

இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும் சேமிப்பு வைப்புச் சான்றிதழ் திட்ட அங்குரார்ப்பண விழா இன்று நடைபெற உள்ளது.

இன்று காலை 9 மணிக்கு இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் இந்த விழா நடைபெறும். (உ-9)

## அதிக வெப்பம்

மூதூர், ஏப்ரல் 12

திருகோணமலை மாவட்டத்தில் வெப்பத்தின் அகோரம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இப்பகுதியில் பெரும் எண்ணிக்கையானோர் வெப்பம் காரணமாக அம்மை, காய்ச்சல், வாய்அவிதல் போன்ற நோய்களுக்காளாகியுள்ளனர்.

கால்நடைகளும் பாதிப்படைந்துள்ளன.

பயிர்ச் செய்கையும் பாதிக்கப்பட்டிருக்குறது. (உ-98)

## அதிபர் பரீட்சை ஆறு மண்டபங்களில்

யாழ்ப்பாணம், ஏம்ரல் 12

அதிபர் தரம் I, II, III ஆகியவற்றிற்கான தகுதி காண் பரீட்சை எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

இந்த பரீட்சைகள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் 6 பரீட்சை மண்டபங்களில் நடைபெறும். [உ-9]

## இலங்கை ராணுவ -----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது ஏவுகணையை உந்தித்தள்ளும் பீப்பாய் போன்ற பகுதி வெடித்துச் சிதறியது.

அப்போது இலங்கை இராணுவ அதிகாரி திரு. செனவிரத்தின உடல் சிதறி இறந்தார். இலங்கை இராணுவத்தில் லெப்டினன்ட் அந்தஸ்தில் இவர் இருந்தார்.

இவ்விபத்தில் பல இலங்கை இராணுவ அதிகாரிகள் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மஹறவ் என்ற இடத்தில் உள்ள இராணுவ மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர்.

இறந்த இராணுவ அதிகாரியின் உடலை இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன. [ஒ-எ]

## ஆரம்ப ஆசிரியர்----

(7ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெல்லிப்பளை. 79. ஆர். சரோஜினி, காரைநகர். 80. வை. யோகநாதன், திருநெல்வேலி தெற்கு. 81. கே. ஜெயராணி, திருநெல்வேலி வடக்கு. 82. கே. கலைச்செல்வி. இடைக்காடு 83. எம். சுதாமதி சாவகச்சேரி. 84. ஆர். தர்மதேவன், சுன்னாகம் கிழக்கு. 85. ஆர். அரியதாசன், மூளாய் தெற்கு. 86. வீ. கே. ரவீந்திரராசா, மீசாலை 87. எஸ். ரதிதேவி, சாவகச்சேரி. 88. ஆர் சாந்தினி, புத்தூர். 89. பீ. கீதாஞ்சலி, புலோலி கிழக்கு. 90. எஸ். ரத்தினபூபதி, காரைநகர். 91 ஜே. சி. வி. கீதப் பொன்கலன், [illegible] 92. எம். தவனேஸ்வரி, கரணவாய் வடக்கு. 93. ஆர். உஷா, கரவெட்டி கிழக்கு. 94. எஸ் பத்மநாதன் கொடிகாமம்.

95. ஏ. நெவிலின் ஜெயந்தி யாழ்ப்பாணம் 96. பி. நாகரஞ்சினி, இணுவில். 97. வை. றஜனி, வட்டுக்கிழக்கு. 98. ஆர். மன்மதராஜா, புங்குடுதீவு. 99. கே. கமலநாயகி அரியாலை மேற்கு. 100. எஸ். பி குகதாஸ், புலோலிதெற்கு 101. பி. பரதமணி கொட்டடி. 102. ஏ. சில்வியா சில்லாலை. 103. பி. இரத்தினமலர், புலோலி கிழக்கு 104. வி ஜெயராணி, தும்பளை. 105. எம். தயந்தி, தாவடி வடக்கு. 106. கோ. கருணவதி, [illegible] 107. [illegible] பாலசுந்தரிராணி, மீசாலை தெற்கு.

## இவ்லின் நிறுவனத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

கொழும்பு, ஏப்ரல் 12

கொழும்பில் இயங்கும் இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்க கல்வி நிறுவனம், யாழ். இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்துக்கு நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

தமிழ் மாணவர்களின் நலன் கருதி ஆங்கிலம் கற்பதற்கான பல நூல்களையும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றுக்கான அனுமதி, தகைமைகள் பற்றிய தகவல்களைக்கொண்ட வழிகாட்டி நூல்களையும் மேற்படி நிறுவனம் வழங்கியுள்ளது.

இவற்றில் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் மாணவர்கள் விரும்பிக் கற்கும் பாடநெறிகளான TOEFL, GRE, SAT, GMAT போன்றவற்றுக்கான பாட நூல்களும் விண்ணப்பப் படிவங்களும் அடங்கும்.

இவற்றைப் பயன்படுத்த விரும்புவோர் பல்கலைக்கழக ஒழுங்கையில் உள்ள மேற்படி நிறுவன நூலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. [ஒ]

## முறைப்பாடு செய்வது இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

இன்றுமுதல் யாழ். பொலீஸ் பகுதியில் முறைப்பாடுகள் பதிவு செய்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல்வரை இந்தப் பொலீஸ்பகுதியில் முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## உள்ளூர்,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகப் பெற்றோர்கள் புகார் கூறுகின்றனர்.

இந்தத் தொலைக்காட்சி ஒளி பரப்பு ஈச்சமோட்டை, அரியாலை, ஊர்காவற்றுறைஆகிய பகுதிகளில் மிகத் தெளிவாகத் தெரிகின்றதாம், [ஒ-எ]

## வீ.எம்..,.

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குத் திரும்பி வருகின்றனர்.

இம்மாதம் ஆரும் திகதி பிரஸ்தாப வீ. எம். வீதியில் நடந்த தாக்குதல் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து 12-4 1989 புதன்கிழமைக்கு முன்னர் தமது வீடுகளைவிட்டு வெளியேற வேண்டும் என அந்த வீதிவாழ் மக்கள் கேட்கப்பட்டிருந்தனர்.

இதுபற்றியசெய்தி 9-4-1989 உதயனில் வெளியாகிஇருந்தது.

பருத்தித்துறையைச் சேர்ந்த பிரமுகர்கள் குழு ஒன்று புலோலி - யாக்கரை இந்திய அமைதிப்படை முகாம் பொறுப்பாளர் பிரிகேடியர் சங்கர் பிரசாத்தை 9-4-1989 இல் சந்தித்து மக்களின் கஷ்டங்களை எடுத்துக் கூறியது.

அதைத்தொடர்ந்து வெளியேறுமாறு முன்னர் விடுக்கப்பட்ட உத்தரவு வாபஸ்பெறப்பட்டது.

இதேவேளை வீ. எம். வீதியில் வாழும் மக்களின் வீடுகளில் இரவு முழுவதும் மின் சாரவிளக்கு எரியவேண்டும் என்று கூறப்பட்டதாம். (அ-160)

## முஸ்லிம் எம்.பிக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சி

அம்பாறை, ஏப்ரல் 12

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் சார்ந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி, முஸ்லிம் சமூகத்தின் நலன் பேணும் விடயங்களில் ஒன்றுபட்டு செயற்படவைப்பதற்கான முயற்சிகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் பேரவை ஒன்று இதற்கான முயற்சிகளில் ஈடுபடவிருப்பதாகத் தெரியவருகின்றது.

அண்மைக் காலத்தில் முஸ்லிம் எம். பிக்கள் சிலர் நாடாளுமன்றத்தில் கருத்துமோதல் நடத்தியதுடன் பரஸ்பரம் தனிப்பட்ட விமர்சனங்களையும் செய்துகொண்டமை பலருக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இனிமேலாவது இத்தகைய மோதல்களைத் தவிர்ப்பதுடன் கட்சி பேதங்கள், மற்றும் வேற்றுமைகளை மறந்து அனைவரும் ஒன்றுபட்டு சமூக நலனுக்காக இயங்கவேண்டுமெனக் கோரப்படவுள்ளனர்.

இதற்கென விரைவில் மேற்படி பேரவை கொழும்பில் விசேட சந்திப்புக் கூட்டம் ஒன்றை நடத்தவிருக்கின்றது. (ஒ-14)

## கப்பம்கேட்டவரின் கிரனேட் வெடித்தது

கப்பம் கேட்டவர் வைத்திருந்த கிரனேட் வெடித்து அவரும் வேறு இரண்டு பேரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

கொம்பனித்தெருவில் உள்ள சிறிய ஹோட்டல் ஒன்றில் கடந்த சனிஇரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

ஹோட்டல் ஊழியர் இருவரே மரணமான மற்ற இரண்டு நபர்கள்.

சுனில் சில்வா என்ற கப்பம் கேட்ட அந்த நபருக்குக் கொடுக்க ஹோட்டல் உரிமையாளர் பணத்தை எடுத்துக் கொண்டு இருந்தாராம். அந்தச்சமயம் சுனில் சில்வாவின் கையில் இருந்த கிரனேட் வெடித்தது. (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் சிவசிதம்பரம் (சுந்தரம்)

(முன்னாள் உதவி தபாலதிபர், சோளாவத்தை)

வேலணை மேற்கைச் சேர்ந்த இராமலிங்கம் சிவசிதம்பரம் (சுந்தரம்) காலமானார்.

அன்னார் பள்ளம்புலத்தைச் சேர்ந்த இராமலிங்கம் முத்துப்பிள்ளையின் மகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவருமாவார். மன்றுளாடி (இளைப்பாறிய தபாலதிபர், யாழ்ப்பாணம்), ஸ்ரீகாந்தன் (என்ஜினியர், லண்டன்), ஜெயஸ்ரீ (என்ஜினியர், சவுதி அரேபியா), ஸ்ரீதேவி, ஸ்ரீரமன் ஆகியோரின் தந்தையுமாவார். கமலேஸ்வரி (தபாற்கந்தோர், யாழ்ப்பாணம்), நிர்மலா (லண்டன்), ஞானு, தியாகலிங்கம் (ஆசிரியர், நாரந்தனை வித்தியாலயம்) ஆகியோரின் மாமனருமாவார். துஷாரா, கஷன், யதுஷா, இந்துஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல் தருபவர்:
சி. மன்றுளாடி

வேலணை மேற்கு,
வேலணை.

[132]

### சின்னத்துரை ஞானம்பிகை

சரவணை கிழக்கு, ஐயனார் கோயிலடி, வேலணையைச் சேர்ந்த சின்னத்துரை ஞானம்பிகை காலமானார். இவர் க. சின்னத்துரையின் அன்பு மனைவியாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-04-1989 புதன்கிழமை 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வீரன் பூவரசடி. சோழவத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவகல்:
க. சின்னத்துரை

சரவணை கிழக்கு,
வேலணை.

[136]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org